# மரியாதா புருஷோத்தம் ஆவதற்காக பாப்தாதாவின் 365 ஸ்ரீமத், படிப்பினைகள், சட்டத்திட்டங்கள் மற்றும் தாரணைகள்

ஆன்மீக படை சதா ஆயுதம் ஏந்தியும் சட்டம் ஒழுங்குடனும் நடக்கக்கூடியதாகும். சட்ட ஒழுங்கு எந்த அளவு உள்ளது? என்றுதான் சேனையில் முக்கிய குணமாகப் பார்க்கப்படும். நீங்கள் சட்ட ஒழுங்கோடு உள்ளீர்களா? ஆன்மீகப் படையின் முக்கிய சட்டம் எது? இதில் அனைத்து சட்டமும் வந்துவிடும்.

முக்கிய சட்டம் - ஒருபோதும் தனது தேகத்தை மற்றும் அன்னிய தேகதாரிகளின் பக்கம பார்க்கக்கூடாது. பாபாவையே பார்த்து ஒவ்வொரு அடியும் எடுத்துவைக்க வேண்டும். இதுதான் ஆன்மீகப்படையின் முக்கிய சட்டம். ஒருவேளை கொஞ்சம் தேகதாரிகளின் பக்கமோ அல்லது தன்னையோ பார்த்தால் பாபாவை அடைவது, பாபாவை சந்திப்பது என்றஇலக்கை வெகு சுலபமாக அடைய முடியாது.

- அவ்யக்த பாப்தாதா - 30.06.1974

1. மாயாவி மக்களின் தொடர்பிலிருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும்.

2. எல்லையற்றபாபாவிடமிருந்து அளவிடமுடியாத ஞானச் செல்வத்தை எடுப்பதற்கு தினமும் இருமுறைஞானக்குளியல் செய்யவேண்டும்.

3. தினசரி படிப்பு படிக்க வேண்டும். படிப்பில் ஒருபோதும் சாக்குபோக்கு சொல்லக் கூடாது.

4. கீழான பேராசை உடையவர்களின் தொடர்பில் ஒருபோதும் மாட்டிக்கொள்ளக்கூடாது.

5. கர்மபந்தனத்தில் ஒருபோதும் மாட்டிக் கொள்ளக்கூடாது.

6. அலௌகீக ஜென்மத்தில் ஒருபோதும் மனமுடைந்து போகாதீர்கள்.

7. ஒருபோதும் அசாந்தியாகாதீர்கள். மிகப் பொறுமையுடனும் கோபம் இல்லாமல் இருத்தல் வேண்டும். இனிமையாக இருக்க வேண்டும். அசாந்தியைப் பரப்பும் மனிதர்களின் தொடர்பிலிருந்து விலகியிருங்கள். யாரிடம் குணம் உள்ளதோ அவர்களுடன் செல்லுங்கள். ததாத்ரேயி போன்று அனைவரிடத்திலிருந்தும் குணங்களை கிரஹிக்கவும். அதிகமாகப் பேசாதிருங்கள். கொஞ்சம் பேசினாலே அனைத்து காரியங்களையும் சாதித்துவிட முடியும். ஆகையால் சாந்தியாக இருங்கள். கர்மேந்திரியங்கள் மீது வெற்றியை பிராப்தியாக அடைய வேண்டும். தீயவர்களிடமிருந்து தங்களை விலக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

8. உங்களது முக்கியமான கடமை முழுநாளும் ஞானமுத்துக்களை கிரஹிப்பதுதான். எழுந்தாலும், அமர்ந்தாலும், நடந்தாலும் சுற்றினாலும் (ஞான சிந்தனை) விசார் சாகர மந்தன்செய்து கொண்டேயிருங்கள். ஞானத்தைத் தவிர மற்றவிசயங்களை பேசாதீர்கள். நீங்கள் முத்துக்களை பருகும் பவித்திர அன்னப்பறவை. உங்களால் மற்றவர்களின் அவகுணம் என்றகல்லை எடுக்கமுடியாது. குணம் நிறைந்த குழந்தைகள் மற்றவர்களின் குணத்தில் தான் வாழ்வார்கள் (மூச்சே விடுவார்கள்)

9. கர்மேந்திரியங்களினால் எந்த தலைகீழான கர்மம், பாவகர்மம் செய்யாதீர்கள். பெயரைக் கெடுக்காதீர்கள்.

10. யாருடைய உள்ளத்தையும் ஒருபோதும் காயப்படுத்தாதீர்கள். மனம், சொல், செயல் மூலம் யாருக்கும் துக்கம் கொடுக்காதீர்கள்.

11. தனது சுபாவம் மிகவும் இனிமையானதாக மற்றும் சாந்தியானதாக ஆக்க பாபாவின் நினைவில் இருக்கவேண்டும்.

12. தனது சுபாவத்தை மிகவும் இனிமையானதாகவும் சாந்தியாகவும் ஆக்குங்கள். தேவதை போல் பேச்சு, நடத்தை இருப்பதை அனைவருக்கும் கூறவேண்டும். தெய்வீக நடத்தையை (Manarce) தாரணை செய்ய வேண்டும்.

13. எப்படி பாபாவை எந்த விசயமும் பெரிதாக பாதிப்பதில்லை. குழந்தைகளுக்கு நோய் மற்றும் எதுவானாலும் பாபா சாட்சியாக இருந்து பார்க்கின்றார். அதேபோன்று குழந்தைகள் நீங்களும் சாட்சியாக ஆகுங்கள். இந்த பழைய உலகத்தின் மீதிருக்கும் பற்றைநீக்கிவிடுங்கள். ஒவ்வொருவரின் கணக்கு வழக்குகள் தனித்தனியானது. ஆத்மா செய்த தலைகீழான கர்மத்தை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஆகையால் சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டேயிருங்கள்.

14. புத்தியோகம் பாபாவைத் தவிர வேறு எவரிடமாவது இருந்தால் பஷ்மாசூரன் ஆகிவிடுவீர்கள்.

15. குறைந்த பட்சம் 8 மணிநேரம் பாபாவின் சேவையிலும் 8 மணநேரம் நினைவிலும் இருங்கள். மற்றும் சுதர்சன சக்கரத்தைச் சுழலவிடுங்கள்.

16. ஒருபோதும் தேக அபிமானியாகி ஸ்தூல சரீரத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள். மற்றவர்களையும் மாட்ட வைக்காதீர்கள். எந்த தேகதாரியிடமும் உள்ளம் மாட்டிக் கொள்ளக்கூடாது. பாபாவை தவிர வேறு யாரிடமும் அன்பு இருக்கக்கூடாது.

17. பாவனமாக ஆக நாம் ஆத்மா சகோதரன் - சகோதரன், பிறகு பிரம்மா பாபாவின் குழந்தையானதால் சகோதரன் - சகோதரி - இந்தப் பார்வையை மிக உறுதியாக்குங்கள். (பக்கா)

18. எந்தச் சூழ்நிலையிலும் அழாதீர்கள்.

19. யாரிடமும் வெறுப்புக் காட்டாதீர்கள்.

20. ஆன்மீக நறுமணமிக்க மலராக வேண்டும். உள்ளுக்குள் இருக்கும் அவகுணம் என்ற முன்கோபத்தை வெளியேற்றவேண்டும். யாரையும் முன்போன்று தூற்றக்கூடாது.

21. எந்த ஒரு விகர்மத்தையும் செய்துவிட்டு பொய்சொல்லி தனக்குத்தானே நஷ்டத்தை உண்டாக்கிக் கொள்ளாதீர்கள்.

22. தனது வாழ்க்கையை வைரம்போல் ஆக்குவதற்க்காக தொடர்பில் மிகவும் பாதுகாப்பு தேவை. நல்ல ஞானமழை பொழிபவருடன் தொடர்பு இருக்க வேண்டும். ஞானமழை பொழியாதவர்களின் தொடர்பில் எந்த லாபமும் இல்லை. தொடர்பில் தவறு அதிகமாக ஏற்படுகின்றது. சிலரின் தொடர்பினால் வைரம் போன்றும் ஆகிறார்கள். சிலர் தொடர்பினால் கல்லாகவும் ஆகிறார்கள். யார் ஞானம் நிறைந்தவரோ அவர் உங்களை தனக்குச் சமமாக ஆக்குவார். இத்தகையோர் தொடர்பினால் தீததொடர்புகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வீர்கள்.

23. ஒருபோதும் தீய வார்த்தை, தீய பார்வை, தீய நடத்தை இருக்கக்கூடாது என்பதில் கவனம் தேவை.

24. எந்த விசயத்திலும் வாக்குவாதம் செய்யாதீர்கள். சர்ச்சையிலும் ஈடுபடக்கூடாது.

25. தேக அபிமானத்தில் வருவதால் பாபாவின் நினைவிற்கு பதிலாக தேகதாரியின் நினைவு. தீய பார்வையும் வருகிறது. இதனால் தீய எண்ணங்கள் வருகிறது. இது மிகவும் பெரிய பாவம். மாயா போர் புரிந்துகொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். உடனே எச்சரிக்கையாகி விடவேண்டும்.

26. ஒருபோதும் விகாரத்தைத் தூண்டும் கேலிப்பேச்சு பேசாதீர்கள். வாயினால் கடுமையான சொற்களைச் சொல்லாதிருங்கள். ஞானமழை பொழிபவராக ஆகி

வாயிலிருந்து ரத்தினங்களே வெளிப்படுமாறு செய்யுங்கள்.

27. எந்த தலைகீழான விசயத்தையும் கேட்டு சந்தேகத்தில் வரக்கூடாது.

28. தனது நடத்தையை மிகவும் ராயலாக வைக்கவேண்டும். மிகவும் மேன்மையாக உரையாடல் செய்யவேண்டும். பணிவு குணத்தை தாரணை செய்யவேண்டும். மிக மிக இனிமையாக வேண்டும்.

29. பாஸ்வித் ஹானர் ஆகவேண்டுமெனில் புத்தியோகம் கொஞ்சம் அலையக்கூடாது. பாபாவின் நினைவிலிருங்கள். எந்த தேகதாரியிடமும் பற்று வைக்காதீர்கள். எந்த ஒரு பெயர், உருவத்திலும் மாட்டிக்கொள்ளாதீர்கள்.

30. உங்களுக்கு பாபா என்ன சொல்கிறாரோ அதையே கேளுங்கள். தீய (அசுர) விசயங்களை பார்க்காதீர்கள், கேட்காதீர்கள், பேசாதீர்கள். (Hear No Evil; See No Evil; Talk No Evil)

31. சொல்வது குறைவாகவும் செய்வது அதிகமாகவும் இருக்க வேண்டும்.

32. யாருடைய பலகீனங்களையும் வர்ணனை செய்வதற்குப் பதிலாக குணசொரூபம் ஆகிவிடுங்கள். குணங்களையே வர்ணனை செய்யுங்கள். அப்படி இப்படி (ரப் & டப்) பேசுவதற்குப் பதிலாக பேசாமலிருப்பது நல்லது.

33. தேவதையாக ஆவதற்கு சாப்பாடு மற்றும் குடித்தலில் முழு கவனம் தேவை. எந்த அசுத்த உணவும் சாப்பிடக்கூடாது.

34. இரவு, பகல் ஒரு பாபாவின் நினைவில் இருப்பேன்... மற்றும் பாபா என்ன கூறுகிறாரோ, அதையே அவசியம் செய்வேன்... என்பதில் திடமான எண்ணம் வைக்க வேண்டும்.

35. ஸ்ரீமத் கூறுகிறது --- நீங்கள் தனது செல்வத்தை பாவ காரியத்தில் ஈடுபடுத்தக் கூடாது. பாவ ஆத்மாக்களுக்கு தானம் செய்வது கூட பாவம் செய்வதற்கு நிமித்தமாவதாகும்.

36. இப்பொழுது (செல்வந்த) பணக்கார பாபாவினுடையவராக ஆகியுள்ளோம், தங்களுக்குள் சண்டைச் சச்சரவு வேண்டாம்.

37. தனது நிலையை உயர்ந்ததாக, சாப்பாட்டில் மிக மிக கவனம் வைக்கவும். புத்திசாலி குழந்தை தனது கையினால் யோகா நிலையில் இருந்து சமைத்து சாப்பிடுவார்கள். பாபாவின் நினைவில் இருந்து அன்பாக உணவு தயாரித்து சாப்பிட்டால் நிலையை மிகவும் நன்றாக ஆக்க முடியும். பாபா நினைவில் உணவு தயாரித்தால் பாபாவும் விருப்பத்துடன் சுவிகாரம் செய்வார். சேவாதாரி குழந்தைகள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வகை சேவையும் தனது கையினால் செய்ய வேண்டும்.

38. ஒருபொழுதும் ஏதாவது தலைகீழான கர்மத்தை செய்து சத்குருவிற்கு நிந்தனை ஏற்படுத்தக் கூடாது.

39. ஒருபொழுதும் பாபாவுக்கு அவமரியாதை செய்யக்கூடாது. தாய் - தந்தை மீது ஒரு பொழுதும் சந்தேகம் கொண்டு வரக் கூடாது.

40. நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட பாபாவிடம் சுவர்க்கத்தின் ஆஸ்தியை எடுக்க சுத்தமான ஆசை மற்றும் ஒரு பாபாவிடத்தில் முழுமையான மோகம் வைக்க வேண்டும். அசுத்த அகங்காரம் மற்றும் அசுத்த ஆசை, மோகம் வந்தால் பதவி கீழானதாக ஆகி விடும்.

41. எந்த பொருளிலும் ஆசை இருக்கக் கூடாது.

42. ஒரு முரளியும் தவறவிடக்கூடாது. ஞானக் கடலின் முழு ஞானத்தையும் பருக வேண்டும். முரளி 5-6 முறைகேட்க, படிக்க வேண்டியது அவசியம்.

43. தேகதாரிகளிடம் அன்பை விடுத்து ஒரு பாபாவிடம் சத்திய அன்பு வைக்க வேண்டும்.

44. குழந்தைகளே ! அந்தர்முகியாகி இருங்கள். வெளியில் எதுவும் பேசாதீர்கள். இந்த ஸ்ரீமத்தின் படி நடந்தால் சகஜமாக சப்தத்திற்கு அப்பால் போக முடியும். நினைவு செய்ய அமிர்தவேளை மிக நல்ல சமயம். அந்த சமயம் எழுந்து அந்தர்முகி ஆகி ஆத்ம ரூபத்தில் நிலைத்து தியானத்தில் அமருங்கள்.

45. அதிகாலை எழுந்து நினைவில் அவசியம் அமர வேண்டும். இதில் தவறு செய்யாதீர்கள்.

46. எந்த பழைய பழக்கவழக்கங்களுக்கும் அடிமையாகி தலைகீழான காரியம் செய்யாதீர்கள். தவறான காரியம் செய்ய வேண்டாம்.

47. வீணானதை பார்ப்பது, கேட்பது போன்றபழக்கத்தை தியாகம் செய்யுங்கள்.

48. குழந்தைகள் முரளியை 5-6 முறைபடிப்பது அவசியம். அப்பொழுது தான் புத்தியில் ஞானம் தங்கும். மேலும் குஷியின் நிலை அதிகரிக்கும். முரளியை எந்த பிரச்சனையானாலும் அவசியம் படிக்க வேண்டும்.

49. தாய், தந்தை, பரிவாரம், தொடர்பில் தங்களுக்குள் கோபித்துக் கொள்ள கூடாது. தங்களுக்குள் சச்சரவு ஏற்படக்கூடாது.

50. சேவையில் தன்னுடன் இருப்பவர்களை முன்னே வைக்க வேண்டும். தான் பின்னே இருக்க வேண்டும். நாம் தன்னை வெளிக்காட்ட வேண்டாம்.

51. சதா புன்முறுவலுடன் இருப்பது மிக நல்ல நடத்தை (Manners). தேவதைகள் சதா புன்முறுவலுடன் இருப்பார்கள். சப்தத்துடன் சிரிக்கக்கூடாது. சத்தமாக சிரிப்பது கூட ஒரு விகாரம் உங்களிடம் நினைவுக்கான மறைமுக (குப்த) குஷி இருக்க வேண்டும். பெமிலியாரிட்டி (தற்பெருமை)யின் சமஸ்காரம் மிகவும் பாதகமானது. சேவையின் வெற்றிக்காக பற்றற்றஸ்திதி தேவை. பெயர் ரூபத்தின் துர்நாற்றம் கொஞ்சமும் இருக்கக் கூடாது.

52. கர்மயோகியாகி காரியம் செய்ய வேண்டும். கூடவே 8 மணி நேரம் சுய புருஷார்த்தத்திற்கு நேரம் ஒதுக்க வேண்டும்.

53. தங்களுக்குள் தேக அபிமானத்திற்கான விசயங்களை பேசாதீர்கள். ஆன்மீக விசயங்களை பேச வேண்டும்.

54. எப்பொழுதாவது தவறு ஏற்பட்டு விட்டால் பாபாவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஏறும் கலைக்கு ஆதாரம் - பாபாவிடம் எதையும் மறைக்க கூடாது.

55. பொய் பேசும் பழக்கத்தை விட்டு விடவும்.

56. உங்களுக்குள் யார்மீதும் வெறுப்பு இருக்கக் கூடாது. ஏனெனில் தாங்கள் அனைவருக்கும் நன்மை செய்பவர் (கல்யாணகாரி) வெறுப்புள்ளவர் பாதி பிராமணன் என அழைக்கப்படுகிறார்.

57. யோகத்தில் பாபாவிடமிருந்து சக்தியை எடுக்க வேண்டுமே தவிர கருணை, ஆசீர்வாதம் கேட்க கூடாது.

58. புகழ்ச்சி - இகழ்ச்சி, மானம் - அவமானத்தில் ஸ்திதி சமமாக இருக்க வேண்டும். எதுவானாலும் படிப்பை விடக் கூடாது. இதை விளையாட்டு எனப் புரிந்து கடந்து செல்ல வேண்டும்.

59. தனது நேரத்தை சாப்பாடு, குடித்தல், அது இது என வீணாக்க வேண்டாம்.

60. பாபாவின் ஸ்ரீமத் - குழந்தைகளே, தூக்கத்தை வென்றவர்களாகவும், அதிகாலை மிகவும் நல்ல சமயம். அந்த சமயம் எழுந்து தந்தை என்னை நினைவு செய்தால், நீங்கள் பக்தாவர் (பாக்கியசாலி) ஆகிவிடலாம். ஒரு வேளை அதிகாலையில் எழுந்திருக்கவில்லை எனில் யார் தூங்கினாரோ அவர் அனைத்தையும் இழந்து விடுவர். வெறும் தூங்குவது, சாப்பிடுவது இழப்பதாகும். ஆகையால் அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

61. ஞானம் நிறைந்த ஆத்மா மற்றஅனைத்து ஆத்மாக்களுடன் மிக இனிமையாக நடந்து கொள்வார்கள். சிலரிடம் நட்பு, சிலரிடம் பகைமையிருப்பது ஞானியின் லட்சணம் அல்ல.

62. எந்த சூழ்நிலையிலும் வாட வேண்டாம். பிரம்மாவுக்கு சிலர் நல்ல குழந்தை. சிலர் தீய குழந்தை, சிலர் சேவாதாரி சிலர் அவப்பெயர் ஏற்படுத்துபவரும் இருப்பர். ஆனால் பாபா ஒரு பொழுதும் வாடியதுமில்லை, மனம் கலங்கியதும் இல்லை. பிறகு நீங்கள் ஏன் வாடி விடுகிறீர்கள்?

63. யாரையும் எதிர்க்க வேண்டியதில்லை. யாராவது ஏதாவது கூறினால், கேட்டும், கேட்காத நிலையில் இருங்கள். பொறுமைசாலியாக ஆக வேண்டும்.

64. பகலில் சரீர நிர்வாகத்திற்காக காரியம் செய்யுங்கள். இரவு உட்கார்ந்து ஞானச் சிந்தனை, பாபாவின் நினைவும், புத்தியில் சுதர்சன சக்கரத்தையும் சுழற்றினால் போதை அதிகரிக்கும்.

65. நீங்கள் பாபாவுக்கு சமமாக முரளிதரன் அவசியம் ஆக வேண்டும். முரளிதரனின் குழந்தை தான் பாபாவின் உதவியாளர்கள். யாருடைய புத்தி மிகவும் ஆக்க பூர்வமாக உள்ளதோ, புத்திசாலியான சேல்ஸ்மேனாக இருக்கிறாரோ, அழிவற்ற ஞானரத்தினத்தை தானம் செய்து சத்தியம் (Pilantheropist) ஆகிறார்களோ அவர்களையே பாபாவுக்கு மிகவும் பிடித்தமானவர்கள். சேவை செய்து செய்து புத்தி சுத்தமாகிவிடும். ஞானதானம் செய்வதில் ஒருபொழுதும் அபிமானம் வரக்கூடாது.

66. சதா ஞானம் மற்றும் யோகத்தின் போதையில் இருங்கள். இந்த பழைய சரீரத்தை சிந்தனை செய்யாதீர்கள். எந்தளவு சரீரத்தில் புத்தி போகிறதோ, ஆசை வைக்கிறோமோ அந்தளவு மேலும் நோய்கள் வந்து விடுகிறது. இந்த சரீரத்தை அலங்காரம் செய்வது, பவுடர், கிரீம் முதலியன பூசுவது அனைத்தும் தவறான அலங்காரம். நீங்கள் தன்னை ஞான-யோகத்தால் அலங்காரம் செய்ய வேண்டும். இது தான் உங்களது சத்தியத்திலும் சத்தியமான அலங்காரம்.

67. எதுவரை விகர்மத்தின் சுமை இருக்கிறதோ, அதுவரை ஞான தாரணை ஏற்படாது. செய்யப்பட்ட கர்மம் இருக்கும் பொழுது அடிக்கடி தடை ஏற்படும். முன்னேறவிடாது. அந்த சுமையை களைய தூக்கத்தை வென்றவராகுங்கள். இரவில் விழித்து பாபாவை நினைவு செய்தால் சுமை லேசாகி விடும்.

68. பாபாவின் ஸ்ரீமத் படி நடப்பவர், அசரீரி ஆக பயிற்சி செய்பவர். ஒரே ஒருவரின் நினைவில் இருப்பவர்தான் பிதா விரதன். அப்படிப்பட்ட நல்ல முதல்தரமான குழந்தை தான் ஒவ்வொரு விசயத்தையும் தாரணை செய்ய முடியும். அவர்களின் எண்ணங்கள் சதா சேவையை பற்றியே ஓடிக் கொண்டிருக்கும். அவர்களின் புத்தி என்றபாத்திரம் பவித்திரமாக இருக்கும். அவர்களால் ஒரு பொழுதும் பாபாவை விட (டைவர்ஸ்) செய்ய

முடியாது.

69. எப்பொழுதாவது ஏதாவது தவறு ஏற்பட்டால் சத்தியத்தை பேச வேண்டும். சத்தியத்தை பேசுவதால் தான் முன்னேற்றம் ஏற்படும். நீங்கள் தனது சேவையை மற்றவர்களிடம் வாங்கக் கூடாது. இங்கு வாங்கினால் அங்கு செய்ய நேரிடும். நீங்கள் மாணவனாக நல்ல விதத்தில் படித்து மற்றவர்களை படிப்பிக்க வேண்டும். அப்பொழுது தான் பாபாவும் மகிழ்ச்சி அடைவார். அன்புக்கடல் பாபா, குழந்தைகளுக்கு உயர்ந்த பதவியை கொடுப்பது தான் அவரின் அன்பு.

70. யோகாவிலிருந்து உணவு தயார் செய்ய வேண்டும். சாப்பிடவும் வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கவும் வேண்டும்.

71. மற்றவர்களின் வாழ்க்கையை உருவாக்குவது மிகவும் நல்ல புருஷார்த்தம். குழந்தைகள் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். எங்காவது தவறு நடந்து விட்டால் அதற்கு பதிலாக அதிக சேவை செய்யுங்கள் இல்லையெனில் அந்த தவறு உள்ளத்தை அரித்துக் கொண்டேயிருக்கும். பாபாவுக்கு யார் சதா யோகாவில் பிஸியாக இருக்கிறார்களோ அந்த ஞானி யோகி குழந்தைகளை மிகவும் பிடிக்கும்.

72. முரளி சொல்லும் பழக்கம் தேவை. தனது நடத்தையினால் பாபாவை வெளிக் காட்ட வேண்டும். உரையாடல் மிகவும் இனிமையாக இருக்க வேண்டும்.

73. இந்த உலகத்தில் வெளிப்படையாக தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டியதில்லை. சம்பூர்ண பாஸ் ஆவதற்கு குப்த புருஷார்த்தம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

74. தனது சுபாவத்தை மிகவும் இனிமையாகவும், சாந்தி மயமாகவும் உருவாக்க வேண்டும். மிகவும் குறைவாகவும், ராயலாகவும் பேச வேண்டும்.

75. எந்த ஒரு சீ சீயான, கீழான பேராசை, ஆசை மற்றும் விருப்பம் வைக்ககூடாது.

76. எதுவெல்லாம் கடந்ததோ, அதை நினைவு செய்ய வேண்டாம். கடந்தவையை கடத்தி விட்டு சதா புன்முறுவலுடன் இருக்க வேண்டும்.

77. மிகவும் அன்புடன் மற்றும் தைரியத்துடன் அனைவருக்கும் ஞான விசயங்களை கூற வேண்டும்.

78. உயர்ந்த புருஷார்த்தியாக ஆகவேண்டுமெனில் படிப்பில் ஒரு பொழுதும் கோபித்துக் கொள்ள கூடாது. படிப்பில் சண்டை சச்சரவுக்கு இடமில்லை. எழுதிப் படித்தால் ஆகிவிடலாம் நவாப் ... ஆகையால் சதா தனது முன்னேற்றத்திற்கான எண்ணம் வையுங்கள். நடத்தையின் மீது மிகுந்த கவனம் தேவை. தேவதைகள் போல் ஆக வேண்டுமெனில் நடத்தை மிகவும் ராயலாக இருக்க வேண்டும். மிகமிக இனிமையாக வேண்டும். வாயிலிருந்து அனைவருக்கும் பிடித்தமான இனிமையான வார்த்தை வரவேண்டும். யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது.

79. பாபாவின் சரணத்தில் வருபவரின் அடையாளம் - அவர்கள் முழுமையிலும் முழுமையான நஷ்டமோகாவில் இருப்பர். அவர்களின் புத்தியோகம் அனைத்து பக்கங்களிலிருந்தும் விடுபட்டு இருக்கும். நண்பர்கள், உறவினர்களிடம் புத்தியின் பற்று இருக்காது. உறுதியான திருமணம் ஒரு பாபாவுடன் இருக்கும். ‘எனக்கு ஒரு பாபாவே தவிர வேறு யாரும் கிடையாது’ என்பது புத்தியில் இருக்கும். அப்படிப்பட்ட குழந்தைகள் தான் சேவையும் செய்ய முடியும். பாபாவும் அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு தான் தனது சரணம் (அடைக்கலம்) தருகிறார்.

80. கோபத்தில் வந்து தனது கையில் சட்டத்தை எடுக்க கூடாது.

81. எந்த சேவைக்கும் முடியாது என்று கூறக்கூடாது.

82. யாருக்கும் பயந்து கொண்டு படிப்பை விடக் கூடாது.

83. தன்னைத் தான் ஆத்மா என புரிந்து ஆத்மா சகோதரரிடம் பேச வேண்டும். இந்த பார்வையை உறுதி செய்தால் எந்த பூதமும் பிரவேசம் ஆகாது. யாரிடமாவது பூதத்தை பார்த்தால் அவர்களை விட்டு விலகி விட வேண்டும். எந்த விசயமானாலும் ஈஸ்வரிய சட்டத்திற்கு புறம்பாக செய்யக் கூடாது. யாரிடமாவது பூதப் பிரவேசம் இருந்தாலோ, பார்வை தீயதாக இருந்தாலோ, அவர்களின் முன் வருவதிலிருந்து விலகி, அவர்களிடம் அதிகமாக பேசுவது கூடாது.

84. விகர்மத்தை வினாசம் செய்வதற்கு மற்றும் ஆயுளை அதிகரிப்பதற்கு நினைவு யாத்திரை அவசியம் செய்யவேண்டும். நினைவினால் தான் பாவனம் ஆவோம். ஆகையால் குறைந்த பட்சம் 8 மணி நேரம் நினைவிற்கான சார்ட் வைக்க வேண்டும்.

85. தேக அபிமானத்தில் வந்து ஒருவர் மற்றவரை தொந்தரவு செய்யக் கூடாது. ஒவ்வொரு விசயத்திலும் இணக்கமுடன் இருக்க வேண்டும். ஒரு போதும் கோள் சொல்லக் கூடாது. போட்டி, பொறாமை கூடாது.

86. எந்த குழந்தை நேர்மையான, சேவாதாரி மற்றும் மிகவும் இனிமையாக இருக்கிறார்களோ அவர்கள் ஒரு பொழுதும் யாருக்கும் துக்கம் கொடுக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட குழந்தைக்கு பாபாவின் செல்லம் கிடைக்கும். எப்பொழுது தங்களுக்குள்அன்பு இருக்குமோ,ஒரு பொழுதும் தவறு ஏற்படவில்லையோ, வாயினால் துக்கம் தரும் சொல் வெளிப்படவில்லையோ, சதா சகோதரன் சகோதரன் என்றஆன்மீக அன்பு இருக்குமோ அப்பொழுது பாபாவை வெளிக் காட்ட முடியும்.

87. உலகாய செய்திகளை கேட்கும் பழக்கம் வைக்காதீர்கள். தனது சமயத்தை உலகாய விசயங்களில் வீணடிக்காதீர்கள்.

88. இங்கு நீங்கள் வனவாசத்தில் இருக்கிறீர்கள். நல்ல உடுப்புகளை உடுத்துவது, நன்றாக சாப்பிடுவது போன்றஎந்த விதமான ஆர்வமும் வைக்காதீர்கள். படிப்பு, நடத்தையின் மீது முழுமையிலும் முழுமையான கவனம் வைக்க வேண்டும். உள் நோக்கமுகமுடையவராக ஆகி தன்னைத்தான் முன்னேற்றவேண்டும்.

89. மனம், சொல், செயலில் பவித்திரமாக இருக்க வேண்டும். கர்மேந்திரியங்களால் எந்த ஒரு விகர்மமும் ஏற்படக் கூடாது. இதில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். தொடர்பின் நிறத்தில் வந்து எந்தவிதமான பாவ கர்மம் செய்யக் கூடாது.

90. இந்த சரிரத்தில் வாழ்ந்தாலும் இறக்கும் பயிற்சி செய்யுங்கள். நானும் ஆத்மா, நீயும் ஆத்மா என்றபயிற்சியினால் பற்றைநீக்கிவிடவும். அனைத்து தேகதாரிகளிடமிருந்தும் பற்றைநீக்கிவிடவேண்டும். சதா சகோதரன் - சகோதரன் என்றநினைவு இருக்க வேண்டும். இது தான் உயர்ந்த இலக்கு. யார் நிரந்தர தேக அபிமானியாக பயிற்சி செய்கின்றனரோ அவர்களே இந்த இலக்கை சென்று அடைய முடியும். ஆத்ம அபிமானம் இல்லை என்றால் எங்காவது மாட்டிக் கொள்வீர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது விசயமோ, தேகதாரியையோ பிடிக்கும். உயர்ந்த இலக்கை அடையக் கூடியவர்களுக்கு சரீர அன்பு பிடிக்காது. அவர்கள் சரீர உணர்வு இழந்த நிலையில் இருப்பர்.

91. ஒரு பொழுதும் யாருடைய சரீரத்தின் மீதும் அன்பு கொள்ளக் கூடாது. வினாசம் ஆகும். சரீரத்தில் உள்ளம் ஈடுபடக்கூடாது. மோகத்தை வென்றவராக ஆக வேண்டும். யாராவது சரீரம் விட்டு விட்டால் நாம் அழமாட்டோம் என உறுதி செய்யுங்கள்.

92. சரீர நிர்வாகத்திற்காக கர்மம் அவசியம் செய்ய வேண்டும். ஆனால், அதிகமான சங்கடங்களில் மாட்டிக் கொள்ளாதீர்கள். பாபாவையே மறந்து போகும் அளவிற்கு வேலையை பற்றிய அதிகமான சிந்தனை வேண்டாம்.

93. இன்ப ஞானமார்க்கத்தில் தீவிரமான வேகத்தில் போகவேண்டுமெனில், அனைத்து எண்ணங்களையும் விட்டு விட்டு பாபாவின் நினைவில் ஈடுபடுங்கள். இதன்மூலம் நீங்கள் சோழிக்கு சமான நிலையிலிருந்து வைரம் போல் ஆக முடியும்.

94. சாட்சாத்காரம் பார்க்கும் ஆசை வைக்காதீர்கள். சாட்சாத்காரத்தினால் ஒரு பலனும் இல்லை. பாபா மற்றும் ஞானத்தை நினைவு செய்வதால் தான் துரு நீங்கும்.

95. நாம் தேவதையாகிக் கொண்டிருக்கிறோம். ஆகையால் சாப்பாடு, குடித்தலில் மிகவும் கவனம் கொடுக்க வேண்டும். தனது நாக்கின் மீது மிகவும் கட்டுப்பாடு வைக்க வேண்டும். நாக்கு சஞ்சலமாக கூடாது.

96. ஆன்மீக படிப்பில் சதா பிஸியாக இருக்க வேண்டும். ஒரு பொழுதும் நாவல் முதலியன படிக்கும் தீய பழக்கம் ஏற்படுத்தக்கூடாது இப்பொழுது வரை அதையெல்லாம் படித்தீர்களோ அவை அனைத்தையும் மறந்து விடுங்கள். முற்றிலும் குழந்தை பருவத்திற்கு சென்றுவிடுங்கள். அப்பொழுது தான் இந்த ஆன்மிக படிப்பில் பாஸ் ஆக முடியும்.

97. தன்னை ஆத்மா சகோதரன் - சகோதரன் எனப் புரிந்து ஒருவர் மற்றவர் மீது ஆன்மீக அன்பை வையுங்கள். சதோ பிரதானம் ஆக வேண்டுமெனில் யாருடைய குறைகளையும் பார்க்காதீர்கள். மற்றவர்களின் திறமையை குறைசொல்லாதீர்கள். ஒரு பாபாவைத் தவிர வேறு அனைத்து விசயங்களையும் மறந்துவிடுங்கள். இவர் அப்படி செய்தார் .... அவர் இப்படி செய்தார் போன்றவிசயங்களில் நேரத்தை வீணடிக்காதீர்கள். பாபாவின் அன்பில் இணைந்திருங்கள்.

98. யாருடைய வீணான விஷயங்களையோ தீய சிந்தனைகளோ கேட்க கூடாது. அவதூறு செய்யவும் கூடாது.

99. இரண்டு பேருக்கிடையில் ஒரு போதும் குறுக்கிட வேண்டாம். யாருக்கும் கேட்காமல் எந்த ஆலோசனைகளும் கொடுக்கக்கூடாது.

100. ஒரு பாபா என்ன சொல்கிறாரோ, என்ன படிப்பிக்கின்றாரோ அதையே கேளுங்கள், படியுங்கள், வேறு எதையும் கேட்கவும் படிக்கவும் அவசியமில்லை. தொடர்பில் மிக மிக கவனமுடன் இருங்கள். அதிகாலையில் ஏகாந்தத்தில் அமர்ந்து (ஞான சிந்தனை) விசார் சாகர் மந்தன் செய்யுங்கள்.

101. அனைவருடைய அன்பு மற்றும் ஆசிர்வாதத்தை அடைவதற்காக ஞான ரத்தினங்களை தனது புத்தி எனும் பையில் நிறைத்து தானம் செய்யவும்.

102. முன்னேற்றத்துக்கு ஆதாரம் அன்பு. ஒரு பாபாவிடம் சத்திய அன்பு வைக்க வேண்டும். நெருக்கத்தில் இருந்தாலும் முன்னேற்றம் இல்லை என்றால் நிச்சயமாக அன்பு குறைவு தான் அன்பு இருந்தால் தான் பாபாவை நினைவு செய்ய முடியும். நினைவு செய்வதால் அனைத்து படிப்பினைகளையும் தாரணை செய்ய முடியும். முன்னேற்றத்திற்காக உண்மையிலும் உண்மையான சார்ட் எழுதுங்கள். பாபாவிடம் எந்த விஷயத்தையும் மறைக்காதீர்கள். ஆத்ம அபிமானி ஆகி தன்னை முன்னேற்றிக் கொண்டேயிருங்கள். அதிகமாகப் பேசவேண்டாம். அதிகமான உரையாடலிலும் வர வேண்டாம்.

103. கடைசி பேப்பரில் பாஸ் ஆவதற்காக பாபாவைத் தவிர பழைய உலகின் எந்த பொருளையும் நினைக்காதீர்கள். எந்த பொருளிலும் ஆசை வைக்காதீர்கள். சாதனங்களிலிருந்து பற்றைநீக்கி விடுங்கள். சகோதரா சகோதரா என்றஉறுதியான பார்வை மற்றும் ஸ்திதியில் இருங்கள். தேக அபிமானத்தை விடுத்து இருங்கள்.

104. ராயலான குலத்தின் ராயலான மாணவன் நீங்கள். உங்களுடைய நடத்தை மிகவும்

ராயலாக இருக்க வேண்டும். அப்போதுதான் பாபாவை பிரத்யட்சம் செய்ய முடியும்.

105. சதா ஆக்ஞாகாரியாக ( கட்டளைக்கு கீழ்படிந்தவராக ) இருக்க முயற்சி செய்யுங்கள். சங்கம யுகத்தில் நேர்மையாக இருந்தால் ராஜ்ய திலகம் கிடைக்கும். கீழ்ப்படியாதவர்கள் என்றால் கட்டளையை ஏற்றுக் கொள்ளாதவர்கள். அவர்களுக்கு ராஜ்யதிலகம் கிடைக்காது. எந்த நோயையும் சர்ஜனிடம் மறைக்கக்கூடாது. மறைத்தால் பதவி குறைந்து விடும். பாபாவை போன்று அன்புக் கடலாகுங்கள்.

106. கோபத்தில் வந்து வாயினால் பாம் (Bomb) போடாதீர்கள். பேசாமல் இருங்கள்.

107. உயர்ந்த லட்சியத்தை அடைவதற்காக கண்களை (பாதுகாப்பாக) கவனமாக செயல் படுத்துங்கள். இது மிகவும் ஏமாற்றக் கூடியது. கிரிமினல் பார்வை மிகவும் நஷ்டம் விளைவிக்கிறது. எனவே எவ்வளவு முடியுமோ தன்னை ஆத்மா எனப் புரிந்து பாபாவை நினைவு செய்யுங்கள். பகவான் கட்டளை என்ன வென்றால் - இனிமையான குழந்தைகளே காமம் மிகப் பெரிய எதிரி இதனிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

108. சேவை செய்ய வேண்டும் என்றஆர்வம் இருந்தால் மோகவலை நீங்கிவிடும். சதா புத்தியில் நினைவு வையுங்கள், இந்த கண்களால் எதை பார்க்கின்றோமோ அனைத்தும் அழியக் கூடியது. பார்த்தாலும் பார்க்காதீர்கள். ஆத்ம சகோதரன் அழிவற்றசிம்மாசனத்தில் இருக்கிறார். ஆகையால் பிருகுட்டியை பார்த்து பேசுங்கள்.

109. ஒரு பாபாவை துணைவனாக ஆக்கி உன்னுடனேயே உட்காருவேன்.... உன்னிடமே கேட்பேன்... உன்னுடனேயே சாப்பிடுவேன்... இந்த அனுபவம் செய்ய வேண்டும்.

110. பாஸ் வித் ஹானர் ஆவதற்காக கர்மவினைக்கு அப்பால் (கர்மாதீத்) காரியம் செய்யுங்கள். யாரிடம் பேசிக் கொண்டிருந்தாலும் ஆத்மா சகோதரன் எனப் புரிந்து சகோதரனைப் பாருங்கள். சகோதரா - சகோதரா பார்வையினால் அந்த அன்பு மேலும் சம்பந்தம் உறுதியாகிவிடும். உயர்ந்த பதவி அடையக் கூடிய குழந்தைகள் இந்த முயற்சி அவசியம் செய்வார்கள்.

111. தகுதியான பிராமணின் வாயிலிருந்து பாபாவின் கீதை ஞானம் வெளிவரும், அவர் அனேக பேரை தனக்குச் சமமாக ஆக்குவார். அனேக பேருக்கு ஞானச் செல்வத்திற்கான தானபுண்ணியம் செய்வார். ஒரு பொழுதும் தங்களுக்குள் மத பேதம் வராது. எந்த தேகதாரியிடமும் புத்தி மாட்டிக் கொள்ளாது. பிராமணன் என்றால் அவரிடம் எந்த பூதமும் இருக்காது. அஹங்காரத்தை விடுத்து தேகி அபிமானியாக இருக்கும் புருஷார்த்தம் செய்வார்கள்.

112. ஏகாந்த வாசி மற்றும் ஆத்ம அபிமானி ஆவதற்கான பயிற்சி செய்பவரின் அடையாளம் வாயினால் ஒரு பொழுதும் தலைகீழான வார்த்தை வெளிவராது. சகோதரன் சகோதரன் என்றஅன்பு தங்களுக்குள் இருக்கும். சதா பாற்கடல் போன்று இருப்பர். தாரணை மிகவும் நன்றாக இருக்கும். அவரால் எந்தவொரு விகர்மமும் ஏற்படாது. அவரின் பார்வை மிகவும் இனிமையாக இருக்கும். ஒரு பொழுதும் தேக அபிமானம் வராது. யாருக்கும் துக்கம் கொடுக்க மாட்டார்கள்.

113. புத்தியோகம் ஒரு பாபாவிடம் ஈடுபடுத்துங்கள். அவர் அப்படி, இவர் இப்படி, செய்கிறார், இவரிடம் இந்த அவகுணம் உள்ளது என்றவிசயங்களில் போவதற்கு அவசியமில்லை. அவகுணத்தை பார்க்கும் பழக்கத்திலிருந்து தன் முகத்தை திருப்பிக் கொள்ளுங்கள். ஒரு பொழுதும் படிப்பிலிருந்து கோபித்துக் கொள்ளதீர்கள். முரளியில் என்னென்ன நல்ல கருத்து இருக்கிறதோ அதை தாரணை செய்து கொண்டேயிருங்கள்.

114. உங்களது அனைத்து வர்ணங்களும் (வேசங்களும்) நீங்க வேண்டும். ஏனெனில் இப்பொழுது வீடு செல்ல வேண்டும். பிராமண குலத்திற்கு அவமரியாதை ஏற்படும்

அளவிற்கு எந்த விகர்மமும் செய்யக்கூடாது.

115. யார் அனேகபேரை சுகமாக்குகின்றார்களோ, நல்ல சேவாதாரியோ அவர்களைப் பார்த்து பாபா புன்முறுவல் பூக்கிறார். யாருடைய புத்தியில் ஒரு பாபாவிடம் நேரடியாக பேசுவேன், பாபா வழிப்படி உடனே நடந்து காட்டுவேன்... என்று இருக்கின்றதோ அவர்கள் பாபாவின் கண்களில் மூழ்கியிருக்கிறார்கள். என்னுடைய சேவை செய்கிறவர்கள் என்னுடைய குழந்தைகள் எனக்குப் பிரியமானவர்கள் என பாபாவே கூறுகிறார். அப்படிபட்ட குழந்தைகளைத்தானே நினைக்கினறேன்.

116. இனிமையான குழந்தைகளே, உலகாய தேவையற்றவிசயங்களை தங்களுக்குள் பேசாதீர்கள். யாராவது சொன்னால் கேட்டும் கேட்காதது போல் ஆகிவிடுங்கள். நல்ல குழந்தைகள் தங்கள் தனது சேவைக்காக கடமையை முடித்துவிட்டு பாபாவின் நினைவில் முழ்கியிருப்பர். ஆனால் அனேக குழந்தைகள் தவறான தீய விசயங்களை மிக ஆனந்தமாகச் சொல்கின்றார்கள், கேட்கின்றார்கள். இதனால் அதிகமான நேரம் வீணாகிறது. பிறகு முன்னேற்றமும் ஏற்படுவதில்லை.

117. தெய்வீக குணங்களின் பாடத்தின் மீது எந்த குழந்தைகளுக்கு கவனம் இருக்கின்றதோ அவர்கள் புத்தியில் "எப்படி நாம் கர்மம் செய்கின்றோமோ நம்மைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள்" என்று இருக்கும்போது ஒருபோதும் யாருக்கும் தொல்லை தரக்கூடாது. அவர்களின் வாயில் எப்பொழுதும் தலைகீழான சப்தம் வெளிவராது. மனம், சொல், செயல் மூலம் யாருக்கும் துக்கம் கொடுக்கமாட்டார்கள். பாபாவிற்கு சமமாக சுகம் கொடுக்கும் லட்சியம் இருப்பதால் தெய்வீக குணதாரணையில் கவனம் உள்ளது எனலாம்.

118. இது பாபாவின் டைரக்ஷன். குழந்தைகளே, கடந்ததில் வாழாதீர்கள். தலைகீழான எந்த விசயத்தையும் கேட்காதீர்கள். சொல்லாதீர்கள். எந்த விஷயம் கடந்ததோ அதனை சிந்திக்காதீர்கள். மேலும் திரும்பச் (ரிபீட்) செய்யாதீர்கள்.

119. இந்த படிப்பில் அனைத்தைக் காட்டிலும் உயர்ந்த பாடம்.... சகோதரா - சகோதரா என்னும் பார்வையை உறுதி (பக்கா) செய்வதாகும். பாபா ஞானம் என்றமூன்றாவது கண் கொடுத்துள்ளார். அதன் மூலம் ஆத்ம சகோதரா - சகோதராவை பாருங்கள். கொஞ்சமும் கண் ஏமாற்றிவிடக்கூடாது. எந்த தேகதாரியின் பெயர், உருவத்தில் புத்தி போகக்கூடாது. புத்தியில் கொஞ்சமும் விகார, கீழான எண்ணங்கள் ஓடக்கூடாது. அதுதான் உழைப்பு. இந்தப் பாடத்தில் பாஸ் பண்ணக்கூடியவர்கள் உலகத்திற்கு எஜமானர்கள் ஆவார்கள்.

120. மகிமைக்கு யோக்கியமானவர்கள் ஆவதற்காக... மிகமிக பணிவுள்ளவர்களாக ஆகுங்கள். எந்த விஷயத்திலும் அகங்காரம் இருக்கக்கூடாது. மிகமிக இனிமை ஆனவர்களாக வேண்டும்.

121. கர்மபந்தனத்திலிருந்து முக்தியடைவதற்கான யுக்தி.... நினைவிற்கான யாத்திரை மற்றும் ஞான சிந்தினை. ஒரு பாபாவுடன் சர்வ சம்பந்தம் வைப்பது. மற்றயார் மீதும் புத்தி போகக்கூடாது. யார் சர்வசக்திவான் பேட்டரியோ அந்த பேட்டரியுடன் யோகம் ஈடுபடுத்த வேண்டும். தன் மீது முழுமையான கவனம், தெய்வீக குண இறக்கை இருந்தால் சர்வபந்தனத்திலிருந்தும் முக்தியடைந்து விடலாம்.

122. தேக அபிமானி ஆவதால் பெயர் ரூபம் எனும் நோய் உருவாகிறது. இந்த நோய்தான் விகாரியாக ஆக்கிவிடுகிறது. ஆகையினால் பாபா சொல்கிறார்... ஆத்ம அபிமானியாக இருக்கும் பயிற்சி செய்யுங்கள். இந்த சரீரத்தில் உங்களுக்கு பற்று இருக்ககூடாது. தேகம் மற்றும் தேகதாரியின் பற்றைவிடுத்து ஒரு பாபாவை நினைத்தால் பாவனமாகிவிடுவீர்கள். பெயர் உருவத்தின் நோய் கடுமையான நோய். அந்தர்முகியாகி அதிலிருந்து முக்தியடைவதற்காக ஒரு பாபாவிடம் உண்மையிலும் உண்மையான அன்பு வையுங்கள். நினைவு செய்யும் சமயத்தில் புத்தி அலைகிறது. தேகதாரியிடம் போனால் பாபாவிடம் சத்தியத்தைக் கூறுங்கள். சத்தியத்தைச்

சொல்வதினால் பாபா மன்னிப்பு கொடுத்துவிடுவார். மருத்துவரிடம் நோயை மறைக்காதீர்கள். பாபாவிற்கு கூறுவதினால் எச்சரிக்கையாகி விடலாம். புத்தி யாருடைய பெயர் உருவத்தில் மாட்டியிருந்தாலும் பாபாவிடம் புத்தியை இணைக்க முடியாது. அவர்கள் சேவைக்கு பதிலாக களங்கம் (Disservice) விளைவிப்பார்கள். பாபாவை நிந்தனை செய்விக்கிறார்கள். அப்படி நிந்திப்பவர்கள் கடுமையான தண்டனையை அனுபவிக்கிறார்கள்.

123. சத்தியமான அன்பு ஒரு பாபாவிடம் வைக்க வேண்டும். மற்றஅனைவரிடத்திலும் பற்றற்று பெயரளவில் அன்பு இருக்கவேண்டும்.

124. இந்தக் கண்களினால் பார்க்கக்கூடிய எந்த பொருளும் முன்னே வரக்கூடாது. பார்த்தாலும் பார்க்காதீர்கள். தேகத்திலிருந்தாலும் தேகி - அபிமானியாகியிருங்கள். புத்தியில் பாபா மற்றும் வீடு தவிர எந்த ஒரு பொருளின் நினைவும் வரக்கூடாது. இதற்காக அந்தர்முகியாக இருந்து தனது குறைகளை சோதனை செய்து வெளியேற்றுங்கள்.

125. நீங்கள் யாரிடமும் கேட்காதீர்கள். “கேட்பதைக் காட்டிலும் இறப்பது மேல்” தானாக அனைத்தும் வரும். வெளியில் உள்ளவர்கள் போல் நீங்கள் சந்தா சேர்ப்பது கூடாது. கேட்பதால் சென்டரில் பலம் குன்றிவிடும். ஆகையால் கேட்காமல்சென்டரை நடத்துங்கள். போர்ப்படைத் தலைவர்கள் ஆகையால் எந்தவிதத்திலும் விருப்பம் வைக்காதீர்கள். ஆசையை அழிக்க வேண்டும். பாபா என்ன கொடுக்கிறாரோ… அதுதான் கட்டளை…. ‘கேட்பதைக் காட்டிலும் மரணமே மேன்மையானது’

126. குழந்தைகள், சத்தியத்திலும் சத்தியமான சார்ட் எழுதுங்கள். சார்ட் எழுதுவதினால் நன்னடத்தை (Character)முன்னேறும். முழுநாளில் எனது நடத்தை எப்படியிருக்கிறது என பார்க்கவேண்டும். யாருக்காவது துக்கம் கொடுத்தேனா? தவறாக ஏதேனும் செய்யவில்லைதானே? ஆத்மா என புரிந்து பாபாவை எவ்வளவு நேரம் நினைவு செய்தேன்? எத்தனை பேரை எனக்கு சமமாக ஆக்கினேன்? அப்படிப்பட்ட கணக்கு எழுதுபவர்களின் நடத்தை முன்னேறிக் கொண்டேதானிருக்கும்.

127. தன்னை ஏழையிலிருந்து பணக்காரனாக்குவதற்காக பாபாவிடம் அழிவற்றஞான ரத்தினம் எடுக்க வேண்டும். ஒவ்வொரு ரத்தினங்களும் லட்சக்கணக்கான ரூபாய்க்கு சமமான இந்த படிப்பு படிக்க வேண்டும். இந்தப் படிப்பு தான் வருமானம் ஈட்டும் வழி. இதன்மூலமே உயர்ந்த பதவியை அடையமுடியும். ஆகையால் நீங்கள் ஒருபோதும் முரளியைத் தவறவிடக்கூடாது. முரளியிடம் அன்பில்லையேல் பாபாவிடமும் அன்பு இல்லை.

128. அனைத்தைக் காட்டிலும் பெரிய அசுர அவகுணம் - கரடுமுரடாக கடுமையாக பேசுவதாகும். இதுவும் பூதம் எனக்கூறப்படுகின்றது. இந்தப்பூதப்பிரவேசம் மிகுந்த நஷ்டத்தை உண்டாக்குகிறது. ஆகையால் இதிலிருந்து விடுபட வேண்டும். சாந்தியாக இருக்கும் பயிற்சி செய்ய வேண்டும். யாராவது தலைகீழாக பேசினால் நீங்கள் பதில் அழிக்க வேண்டாம். சாந்தியாக இருக்கவும். தவறுதலாக தேவையற்ற விஷயங்களைப் பேசாதீர்கள். வாயில் சாந்திக்கான கொலுக்கட்டை போட்டுக் கொள்ளுங்கள்.

129. சம்பூர்ண தெய்வீகமாக ஆக்கவேண்டும். இதுவே அனைத்தைக் காட்டிலும் உயர்ந்த இலக்கு. கர்மேந்திரியங்களால் கொஞ்சமும் சஞ்சலம் அடையாத நிலை ஏற்படும்பொழுது விஷ்வத்தின் இராஜ்யம் கிடைத்துவிடும். ஆகையால் லாபம், நஷ்டம் மற்றும் மரியாதையைக் கவனத்தில் வைத்து (கிரிமினல்) தீயபார்வையை அழித்துவிட வேண்டும்.

130. ஒருபோதும் ஆங்காங்கே கேட்ட விஷயங்களில் நம்பிக்கை வைத்து தனது ஸ்திதியை கெடுத்துவிடாதீர்கள். பொய்யான விசயங்களை கேட்டு தன்னுள் வெந்து போக

வேண்டாம்.

131. தேவதைகளுக்கு சதா புன்சிரித்த முகத்தையே காட்டுகிறார்கள். அதேபோன்று குழந்தைகள் நீங்களும் சதா புன்முறுவலுடன் இருக்கவேண்டும். எப்படிப்பட்ட விசயமானாலும் சரி புன்சிரிப்புடன் இருங்கள். ஒருபோதும் உதாசீனம் கோபம் வரத் தேவையில்லை. எப்படி பாபா ஒருபோதும் கோபமோ உதாசீனமோ ஆவதில்லை. அப்படி குழந்தைகளும் ஆக வேண்டும். ஒருபோதும் குழப்பத்தில் வரவேண்டாம்.

132. சூட்சுமத்தில் பேராசை என்றவிகாரம் இருந்தாலோ, இதன் காரணமாக ஏதாவது ஒரு பொருளைத் தன்வசம் வைத்திருந்தாலோ அது இறுதியில் விபத்து என்றரூபத்தில் நினைவில் வரும். ஆகையால் பாபா கூறுகின்றார்... குழந்தைகளே, தன்னிடம் எதையும் வைத்துக் கொள்ளாதீர்கள்.

133. சரீர ஆரோக்கியத்திற்காக உடற்பயிற்சியாக நடந்து செல்லும்போது தங்களுக்குள் தேவையற்றபிற(புற) சிந்தனைகளை செய்யாதீர்கள். பாபா நினைவில் நடக்கவும்.

134. எந்த குழந்தைகளுக்கு ஒரு பாபாவிடம் அன்பு இருக்குமோ அவர் முழுமையான நஷ்டமோக நிலையில் இருப்பார்கள். அவர்களின் புத்தி பொய்யான கண்டத்தின் பொய்யான மனிதர்களிடமிருந்து விலகிவிடும். யாருக்கு எல்லையற்றபாபாவின் அன்பு பிடிக்குமோ அவர்கள் மற்றயாரின் அன்பிலும் மாட்டிக் கொள்ளமாட்டார்கள். பாபாவின் பார்வை அவர்களை முழுதிருப்தி அடைய வைத்துவிடுகிறது. பாபாதரும் அப்படிப்பட்ட அன்பு உங்களுக்கு அழிவற்றநிலை உருவாக்குவதோடு மட்டுமின்றி சத்தியுகத்தில் உங்களுக்குள் மிகுந்த அன்போடும் இருக்க வைக்கின்றது.

135. இனிமையான குழந்தைகளே, நீங்கள் என்னை நினைத்தால் தண்டனையின்றி உங்களை வீடு நடத்திச் செல்வேன் என்று உத்திரவாதம் செய்கிறேன். நீங்கள் பாபாவிடம் உள்ளத்தை ஈடுபடுத்துங்கள். இந்த பழைய உலகத்தை பார்த்தாலும் பார்க்காதீர்கள். இந்த உலகில் இருந்தாலும் பவித்திரமாக ஆகிக்காட்டுங்கள். நிச்சயமாக பாபா உங்களுக்கு உலக இராஜ்யம் கொடுப்பார்.

136. அகங்காரத்தில் ஒருபொழுதும் வரவேண்டாம். படிப்பினை கிடைக்கும்போது அதற்கு பங்கம் விளைவிக்க வேண்டாம். பாபா ஏன் இப்படிக் கூறினார்? எனது மரியாதை போய்விட்டது. இந்த இராவண இராஜ்யத்தில் மரியாதை எப்பொழுதோ போய்விட்டது. தேக அபிமானத்தில் வருவதால் தனக்குதானே நஷ்டம் விளைவித்துவிடுகின்றனர்.

137. தனது குறைகளைக் களைய தனது நடத்தைகளை (Charactor) ரிஜிஸ்டர் செய்யுங்கள். இதில் தினமும் கணக்குகளின் குறிப்பு எழுதுங்கள். குறிப்பு எழுதுவதால் தனது பலகீனங்களை அறிந்துகொள்ள நேரிடும். பிறகு எளிதாக அதை வெளியேற்ற முடியும். குறைகளை வெளியேற்றி ஒரு பாபாவைத் தவிர இரண்டாவது எதுவும் நினைவில் வரக்கூடாது என்றநிலைவரை சென்று அடைய வேண்டும். எந்த பழைய பொருளிலும் பற்று இருக்கக்கூடாது.

138. காலன் தலைமீது நிற்கின்றான். ஆகையால் சுப காரியம் செய்வதில் காலம் தாழ்த்த வேண்டாம். நாளை என்று ஒத்திப் போடவேண்டாம்.

139. பாபாவின் கட்டளை.... இனிமையான குழந்தைகளே... யாரிடமும் சச்சரவு செய்யாதீர்கள் . சாந்தியாக இருக்க வேண்டும். ஒருவேளை யாருடைய விசயங்களோ உங்களுக்கு நன்றாகத் தோன்றவில்லை என்றால் அமைதியாக இருங்கள். ஒருவர் மற்றொருவருக்கு தொல்லை தராதீர்கள். எப்பொழுது உங்களுக்குள் எந்த பூதமும் இல்லையோ வாயினால் எந்த கடுமையான சொல்லும் வரவில்லையோ அப்பொழுது பாபாவின் இதய சிம்மாசனதாரியாகிவிடலாம். இனிமையாகப் பேசுவது வாழ்க்கையில் தாரணையாகி விடவேண்டும்.

140. ஸ்காலர்ஷிப் (ஊக்கபலன்) வாங்குவதற்கு அனைத்து பொருள்களிலிருந்தும் பற்றை

நீக்குங்கள். செல்வம், குழந்தைகள், வீடு முதலியன எதுவும் நினைவில் வருதல் கூடாது. சிவபாபாதான் நினைவில் இருக்கவேண்டும். முழுமையாக பலியானால்தான் உயர்ந்தபதவி பிராப்தியாகக் கிடைக்கும். தனது என்று எதுவும் இல்லை. எப்படி லட்சியமோ அப்படிப்பட்ட சுபமான சொல் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட புருஷார்த்தம் செய்யவேண்டும்.

141. பாபாவிடம் தூய்மைக்கான உறுதிமொழி கொடுத்தால் தன்னை மாயாவின் போரிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும். ஒருபோதும் மாயாவின் அடிமையாகவோ மாயாவைப் பின்பற்றுபவனாகவோ ஆக வேண்டாம். திருப்தியான விசால புத்தியுடையவராக ஆகவேண்டுமெனில் யாரிடமும் கண்கள் மாட்டிக் கொள்ளக்கூடாது.

142. அழியும் சரீரத்தில் மோகம் வைப்பது சட்டவிரோதமான, பொய்யான அன்பு, யார் அழியும் பொருளில் மோகம் வைக்கிறார்களோ அவர்கள் அழுவது உறுதி. அழியும் சரீரத்தின் அன்பை நீக்கி அழிவற்றபாபாவிடம் அன்பு வைத்தால் ஒருபோதும் அழமாட்டீர்கள்.

143. சதா லேசாக இருக்கவேண்டுமெனில் இந்த ஜென்மத்தில் என்னென்ன பாவம் செய்தோமோ அதை பாபா முன் வையுங்கள்.

144. யாருடைய மனதில் தீய எண்ணம் இல்லையோ அவர்களிடம் முழுமையான தூயபார்வை இருப்பதால் அவர்கள்தான் அஷ்ட ரத்தினம் ஆகிறார்கள். அதாவது கர்மாதீத் நிலையை அடைகின்றனர். அஷ்ட ரத்தினங்கள் தொலைநோக்கு புத்தி கொண்டிருப்பதால் சகோதரன் -சகோதரன் என்றநினைவு நிரந்தரமாக இருக்கும்.

145. ஒவ்வொரு மனநிலை மற்றும் யோகம் இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்கின்றது. ஆகையால் தனித்தனியாக யோகத்தில் அமருங்கள். உடல் உறுப்புகள் ஒட்டக்கூடாது.

146. நேர்மையான மலர்கள் ஒருபோதும் மாயாவின் வசமாக மாட்டார்கள். மாயாவின் குழப்பத்தில் வரமாட்டார்கள். அப்படிப்படட்ட நேர்மையான மலர்கள் இறுதியில் வந்தாலும் முதலில் செல்ல முயற்சி செய்வார்கள். அவர்கள் பழையவர்களைக் காட்டிலும் முன்னே செல்ல லட்சியம் வைப்பார்கள். தனது அவகுணங்களை வெளியேற்றுவதில் முயற்சி செய்வார்கள். மற்றவர்களின் அவகுணங்களை பார்க்கமாட்டார்கள்.

147. சதா ஸ்ரீமத்படி நடந்து செல்லுங்கள். இதுதான் உயர்ந்த புருஷார்த்தம். யாருடைய புத்தியோகம் ஒரு பாபாவிடம் இருப்பதில் கவனம் இருக்குமோ அவரே முழு புருஷார்த்தம் செய்ய முடியும். பாபாவிடம் முழுவதும் பலியாவது தான் உயர்ந்த புருஷார்த்தம். பலியாகும் குழந்தைகளைத்தான் பாபாவிற்கு மிகவும் பிடிக்கும்.

148. கோபம் மிகவும் தீயது. அது தன்னையே எரிக்கும். கோபத்திற்கு வசமாகி கட்டளைகளை அவமதிப்பது கூடாது.

149. யாருடைய புத்தியில் ஞானம் தாரணையாகிறதோஅவர்கள் புத்திசாலிகள். அவர்களுக்கு மற்றவர்களிடத்தில் ஞானம் சொல்வது ஆர்வம் அதிகமிருக்கும். அவர்களிடமிருந்து நண்பர்கள், உறவினர்கள் யாரும் தப்பிக்க முடியாது. அவர்களுக்கு படிக்கும்போது கொட்டாவி வராது. பள்ளியில் ஒருபோதும் கண்கள் மூடி உட்காரமாட்டார்கள். எந்த குழந்தை ஆர்வமின்றி உட்காருகிறதோ அதன் புத்தி அங்குமிங்கும் அலைபாயும். அவர்களால் ஞானத்தை புரிந்து கொள்ளமுடியாது.

150. பாபா என்ன ஞானக் கஜானா தருகின்றாரோ அதை எடுத்துக் கொள்ள ஓடி ஓடி

வரவேண்டும். இதில் எந்த விஷயத்திலும் சாக்குபோக்கு கூறக்கூடாது. பாபாவை நினைவில் 10மைல்கள் நடந்தால்கூட களைப்பிருக்காது.

151. தீய படம் பார்க்கும், தீய செய்தி கேட்கும் பழக்கம் இருந்தால் பாபாவை நினைக்க முடியாது. சினிமா நரகத்தின் வாயில். அது உங்கள் எண்ணங்களைக் கெடுத்துவிடுகிறது.

152. ஸ்ரீமத்தில்தான் தாய், தந்தை, டீச்சர், குரு அனைவரின் வழியும் ஒன்றாக கிடைக்கின்றது. ஸ்ரீமத் இனிப்பு போன்றது. அதில் அனைத்து ரசனையும் உள்ளது.

153. ஒருதலைப்பட்சம் என்றலேசான போதைகூட இருக்ககூடாது. இந்த மாயாவினால் சேவையில் வெற்றியடைய முடியாது.

154. யார் நிந்தனை செய்தாலும் நாம் கோபத்தில் வரவேண்டாம். யாருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

155. யாருக்கு எனக்கென்று ஒரு சிவபாபா வேறுயாருமில்லை என்றபாடம் உறுதியாக இல்லையோ அவர்களை மாயா எளிதாக கவர்ந்துவிடுகிறது. பாபாவினுடையவராகியும் சூத்திரனை நினைவு செய்தால் மாயா தனது பக்கம் ஈர்த்துவிடுகிறது. சிவபாபா உங்களுக்கு 21 ஜென்ம ஆஸ்தி தருகிறார். அது மட்டுமின்றி புது உலகத்திற்கு எஜமான் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் எனில் இரண்டாவது ஒருவரின் நினைவு ஏன்வரவேண்டும்?

156. நினைவு யாத்திரையில் இருப்பவர்களின் அடையாளம்....

- மிகவும் கம்பீரம், புத்திசாலியாக இருப்பார்கள். சதா சாந்தமயமாக இருப்பார்கள்.
- அவர்களிடம் அசுத்த அகங்காரம் இருக்காது.
- அவர்களுக்கு ஒருபாபாவைத் தவிர வேறு எந்த விசயமும் பிடிக்காது.
- அவர்கள் மிகக் குறைவாக மெதுவாக பேசுவார்கள். அறிவிப்பின்படி காரியம் செய்வார்கள். சப்தத்துடன் பேசவோ சிந்திக்கவோ மாட்டார்கள்
- அவர்களின் நடத்தை மிகவும் மேன்மையானதாக இருக்கும்.
- அவர்களிடம் நான் ஈஸ்வரன் குழந்தை என்கிறபோதையிருக்கும்.
- தங்களுக்குள் மிகவும் அன்புடன் இருப்பார்கள். ஒருபோதும் உப்புத் தண்ணீராக இருக்கமாட்டார்கள்.
- அவர்களின் பேச்சு மிகவும் முதல்தரமாக இருக்கும்.

157. யாருக்கும் தலைகீழான வழிகளைக் கொடுத்து துஷ்டத்தனம் செய்யக்கூடாது.

158. படிப்பை விட்டுச் செல்வதற்கான முக்கிய காரணம்.... பெயர் ரூபத்தின் நோய். யாராவது தேகதாரியின் பெயர் ரூபத்தில் மாட்டிக் கொள்வதால் படிப்பில் உள்ளம் ஈடுபடாது. மாயா இந்த விசயங்களால் தோல்வியுறச் செய்கிறது. இது மிகப் பெரிய தடை.

159. பாபாவுக்கு சமமாக துக்கத்தை நீக்கி, சுகத்தை தருபவராக ஆகுங்கள். யாருக்கும் துக்கத்தை தரும் விசயங்களை விட்டு விடுங்கள். எந்த விகர்மமும் செய்யாதீர்கள். நல்ல நடத்தையை தாரணை செய்யுங்கள். தனது நேரத்தை பாபாவினுடைய நினைவில் வெற்றியுடையதாக்கினால் பாபாவின் உள்ளசிம்மாசனதாரியாக ஆகி ருத்ரமாலையில்

சுற்றப்படுவோம். ஒருவேளை தனது நேரத்தை வீணடித்தால் அதற்கு பரிகாரமாக தனது பதவியைக் கீழாக்கிக் கொள்கிறார். பொய் பேசுவது, தவறு செய்துவிட்டு மறைப்பது, மற்றவர்களின் உள்ளத்தை காயப்படுத்துவது இவை அனைத்தும் பாவமே.

160. யாருக்கு இப்பொழுது வரை அசுர சுபாவம் உள்ளதோ தங்களுக்குள் மதபேதம் காரணமாக பேசிக் கொள்வது கிடையாதோ, அவர்கள் இப்பொழுதும் காட்டு முள்தான். அப்படிப்பட்ட குழந்தைகள் பிரம்மாகுமாரர் - குமாரி என்று சொல்ல முடியாது. பிரம்மா குமார்- குமாரிகளின் சுபாவம் மிகவும் இனிமையாக இருக்க வேண்டும்.

161. பாபாவிடம் புத்தியோகம் ஈடுபடாததற்கு முக்கிய காரணம்..... யாதெனில் ஆசைதான். ஏதாவது அழியும் பொருள்களில் ஆசை இருந்தாலோ சாப்பிடும் பண்டங்களிலோ உடுத்தும் உடைகளிலோ ஆர்வம் இருந்தால் அவர்களின் புத்தியோகம் பாபாவிடம் ஈடுபடமுடியாது. ஆகையால் எல்லையற்றபாபாவிடம் ஆஸ்தியடைவதற்கான ஆசை வையுங்கள், என்றவிதியை பாபா தருகிறார். மற்றபடி எந்த பொருள்களிடமும் ஆசை வேண்டாம். இல்லையெனில் எந்தபொருளில் அதிகஅளவு அன்பு இருக்குமோ அது இறுதியில் நினைவாக வந்து மேலும் பதவியை கீழானதாக்கி விடும். ஆசைக்கு வசமாகி எந்த பொருளையும் தன்னிடம் மறைத்துவைக்காதீர்கள். சிவபாபாவின் யக்ஞத்திலிருந்து அனைத்தையும் எடுத்தால் அது பாபாவின் நினைவைத் தரும். அந்நேரத்தில் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

162. பிராமணன் ஆன பிறகு விலைமதிப்பற்றவாழ்க்கை உருவாக ஆதாரம்.... சொல் செயல் மூலம் சேவை. யார் சொல் மற்றும் செயல் மூலம் சேவை செய்யவில்லையோ அவர்களுக்கு வாழ்க்கையில் எந்த மதிப்பும் கிடையாது. சேவையில் அனைவரது ஆசீர்வாதமும் கிடைக்கின்றது. யார் அரைமணிநேரம் கூட ஈஸ்வரிய சேவை செய்யவில்லையோ அவர்கள் தனது நேரம் சக்தி அனைத்தையும் வீணாக்குகிறார்கள். அவர்களின் பதவி அழிந்துபோய்விடுகிறது.

163. யாருடைய புத்தியோகம் பழைய உறவினர்களிடம் அலைகின்றதோ அவரிகளிடம் முழுமையான ஞானம் இல்லை. அல்லது ஏதாவது பழக்க வழக்கம் உள்ளது. அப்படிப்பட்ட குழந்தைகளை மாயா தனது பக்கம் இழுத்துக்கொள்கிறது. வெளித் தொடர்பும் மிகவும் தீயது. அது நம்மை அழித்துவிடும். தொடர்பின் தாக்கம் மிகவும் சீக்கிரம் ஏற்படுகின்றது. ஆகையால் பாபா கூறுகிறார். ... ஒருபாபாவின் தொடர்பு என்ற புத்தியோகத்தில் இருங்கள் பாபாவையே பின்பற்றவும். தேகதாரிகளிடம் புத்தி யோகத்தை வைக்காதீர்கள். யாராயினும் எவ்வளவுதான் அன்பாக இருந்தாலும் அவர்களிடம் அன்பு வைக்காதீர்கள். அன்பு ஒரு பாபாவிடம் வைத்தால் உயர்ந்த பதவி கிடைக்கும்.

164. எவ்வளவுதான் குணம் நிறைந்தவரானாலும் இனிமையானவரானாலும் செல்வந்தரானாலும் அவர்பக்கம் கவர்ச்சி செல்லக்கூடாது. உடலை நினைக்கக் கூடாது. ஒருவர் மற்றவர் தேகத்தின் மீது நாயகன் -நாயகி ஆவது தேக உணர்வின் தொடர்பு.

165. எந்த பொருளையும் ஆசையின் வசமாகி தன்னிடம் அதிகமாக வைத்துக் கொள்ளக் கூடாது. அதிகமாக வைத்துக் கொண்டால் அதில் அடங்கி ஒடுங்கிவிடுவோம். பாபாவின் நினைவு மறந்துவிடும்.

166. ஈஸ்வரிய போதையில் இருக்கக் கூடிய குழந்தைகளின் நடத்தைகள் மிகவும் ராயலாக இருக்கும். வாயினால் மிகவும் குறைவாக பேசுவார்கள். தவறான விசயங்களை பேசமாட்டார்கள். வாயிலிருந்து சதா ரத்தினங்கள் தான் வெளிவரும். ராயலான மனிதர்கள் மிகவும் குறைவாக பேசுவார்கள். நீங்களோ இறைவனின் குழந்தைகள். ஆகவே ராயலாக இருக்க வேண்டும்.

167. புத்தியோகம் ஆங்காங்கே அலைவதுதான், ஞானதாரணை இல்லாததற்கு காரணம். ஒருவரிடம் முழுமையான யோகம் இல்லை. ஆத்ம அபிமானியாக இல்லாத காரணத்தினாலும் தாரணை ஆவதில்லை. பாபா கூறுகிறார், குழந்தைகளே பெயர் உருவத்தில் (Femiliarity) வரதாதீர்கள். ஒருவர் மற்றவரின் பெயர் உருவத்தை நினைவு செய்யாதீர்கள். ஒரு பாபாவை தவிர வேறு யாருமில்லை என்றபாடத்தை உறுதி (பக்கா) செய்யுங்கள் மற்றவர்களின் பின்னே செல்லாதீர்கள்.

168. ஒருசில குழந்தைகள் முரளிபடிப்பதிலும் கேட்பதிலும் சோம்பேறியாக உள்ளனர். முரளியை தவறவிடக்கூடாது. பாபா கூறுகிறார் - இதில் அலட்சியம் வேண்டாம். ஒரு முரளிகூட தவறவிடக் கூடாது.

169. இங்கே அங்கே அமர்ந்து வீணான விசயங்களில் தனது நேரத்தை போக்காதீர்கள். பாபாவின் நினைவிருந்தால் அந்த நேரம் பயனுள்ளதாகிவிடும்.

170. பாபா கூறுகிறார்... குழந்தைகளே, மனதில் எந்த விகாரமும் வைக்காதீர்கள். எப்படி காமம் மகா எதிரியோ அப்படியே கோபமும் குறைந்ததல்ல. அனேக குழந்தைகள் கோபத்திற்கு வசமாகி அதிகமான தொல்லை ஏற்படுத்துகின்றனர். இவர்களால் மிகப்பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. இந்த கோபத்தின் அம்சம் கூட குழந்தைகளிடம் இருக்கக்கூடாது. இது மிகப்பெரிய கடுமையான பத்தியம் (விரதம்) ஆகும்.

171. ஒரு பொழுதும் வீணான மற்றும் சைத்தான் விசயங்கள் சொன்னால் அதற்கு துணை போகாதீர்கள். தவறான விசயங்களை சரி எனக் கேட்பது என்றால் பாபாவின் கட்டளையை அவமரியாதை செய்வதாகும்.

172. உங்களது சொல், நிலை, செயல் அனைத்தும் ஒரே மாதிரி இருந்தால் மற்றவர்களுக்கு சேவை செய்யமுடியும்.

173. தங்களுக்குள் கேலி-கூத்து செய்து யாரையும் துக்கப்படுத்துவது, கேலியில் விகார வாசனை உருவாக்கும் பாவி, அவர்கள் யோகியாக முடியாது. யோகி குழந்தைகள் வாயினால் ஒருபொழுதும் கடுமையான சொல் வராது. அவர்களின் புத்தி மிகவும் பெரியதாகவும் சுத்தமாகவும் இருக்கும். யோகிகள் கர்மயந்திரியங்கள் சீத்தலமாக இருக்கும். சஞ்சலமானால் அவர்கள் யோகி கிடையாது.

174. யோகாவில் அமரும்பொழுது புத்தி அலைந்தால், ஏதாவது தேகதாரியின் நினைவு வந்தால் இதுவும் சூட்சம பாவம்.

175. மகாரதி குழந்தைகள் ஒவ்வொரு சமயமும் தன்னை சோதனை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களிடம் எந்த விதமான அழுக்கும் இருக்காது.

176. உங்களுடைய சரீரத்தில் துளி அளவு கூட அன்பு இருக்கக்கூடாது. ஒருபொழுதும் உலகீய அலங்காரம் செய்யாதீர்கள். அனைத்து மனிதர்களாலும் நாகரீகத்தில் மாட்டியிருக்கிறீர்கள். தனது தேகத்தை டிப்டாப்பாக வைத்திருந்து மற்றவர்களை கவர்ச்சி செய்வது கூட கஷ்டம். கீழான புத்தியுடையவர்கள் தேகத்தின் பக்கம் ஆகர்சனம் செய்கிறார்கள். தூய புத்தியுடையவர்கள் தேகத்தைப் பார்த்தாலும் பார்ப்பதில்லை. ஒரு பாபாவிடம் அன்பு வைப்பார்கள்.

177. அனைத்தைக் காட்டிலும் நல்ல முயற்சி யாதெனில் தனது பெயர்-ரூபத்தை மறந்து, ஆத்மா நட்சத்திரத்தின் மீது நம்பிக்கை வைத்து பாபாவை ஒளிரூபத்தில் நினைவு செய்ய வேண்டும்.

178. நீங்கள் இப்பொழுது சப்தத்திலிருந்து சைகையால் அமைதியில் செல்ல வேண்டும். ஆகையால் மிகவும் மெதுவாக மற்றும் குறைவாக பேசும் பயிற்சியை செய்யுங்கள்.

179. இப்பொழுது மனிதனிலிருந்து தேவதை ஆவதற்கான படிப்பு படித்துக் கொண்டிருக்கிறோம், ஆகையால் தெய்வீக குணங்களின் மீது மிகவும் கவனம் வைக்கவேண்டும். உங்களது உணவுப் பழக்கம் மிகவும் சாத்வீகமாக மற்றும் சாதாரணமாக இருப்பது அவசியம் கொஞ்சமும் ஆசையிருக்கக் கூடாது. வார்த்தை-நடத்தை கூட ராயலாக இருக்க வேண்டும்.

180. சத்திய வைஷ்ணவன், யாருக்கும் துக்கம் தரமாட்டார், தவறான விசயங்களை கூறி யாரையும் கெடுக்க மாட்டார். மேலும் உணவுப்பழக்கம் சுத்தமாக இருக்கும்.

181. சேவாதாரி குழந்தைகளிடம் எந்தவித கீழான விருப்பங்கள் இருக்கக் கூடாது.

182. பாபா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் வழி கொடுக்கிறார். இனிமையான குழந்தைகளே, நேரம் மிகவும் குறைவாக உள்ளது. ஆகையால் இந்த விலைமதிப்பற்றநேரத்தை வேஸ்ட் ஆக்காதீர்கள். நீங்கள் ஜோலிக்குப் பின் சென்று நேரத்தை இழக்காதீர்கள்.

183. இந்த படிப்பிற்காக ஒவ்வொருவரும் பவித்திரமாக இருக்க வேண்டும். பாபாவுக்கு சமமாக பவித்திரக்கடலாக ஆகவேண்டும். இறுதிவரை பிரம்மச்சரியத்தில் இருந்து இந்த படிப்பை படிக்க வேண்டும்.

184. வெப்பமோ குளிரோ ஏற்பட்டால் பொறுத்துக் கொள்ளாமல் மென்மையாக ஆகக் கூடாது. இந்த துக்கதாமத்தில் துக்கம்-சுகம், குளிர்-வெயில், இகழ்ச்சி-புகழ்ச்சி அனைத்திலும் சமமாக வேண்டும். பாபா இங்கு வெப்பம் அதிகமாக உள்ளது சேவை செய்ய முடியாது என்று சேவாதாரி குழந்தைகள் இந்த சாக்குபோக்கு கூறமாட்டார்கள். குளிர்-வெப்பம் அனைத்திலும் தைரியமாக இருக்க வேண்டும்.

185. ஓ சிவபாபா... எனக் கூறுவது கூட பக்திமார்க்கத்தின் பழக்கம் இது அழைக்கும் சப்தம்.

186. நீங்கள் ஒருபொழுதும் வாடிப்போகக் கூடாது. முகத்தில் உதாசீனம் வருவது கூட மாயாவிடம் போர் என்று அர்த்தம்.

187. ஒருபொழுதும் எந்த தேகதாரியிடம் பிரத்தியேக கடித போக்குவரத்து வைக்கக்கூடாது. தனிப்பட்ட கொடுக்கல்-வாங்கல் செய்யக்கூடாது. தேகதாரியிடம் உள்ளத்தை ஈடுபடுத்துவது, தலைகீழான கர்மத்தின் கணக்கு வழக்காகிவிடுகிறது. ஆகையால் சதா இந்த கவனம் வையுங்கள். நமது உயிரின் அன்பு பாபா கிடைத்துவிட்டார். அவரைத்தவிர வேறு யாரையும் நினைவு செய்யக்கூடாது. உங்களது கண்கள் யாரிடமும் மாட்டிக் கொள்ளக் கூடாது.

188. நினைவு யாத்திரையில் இருக்கக்கூடியவர்கள் தனது சார்ட் அவசியம் வைப்பார்கள். ஞானத்தின் சந்தேகிப்பவர்கள் யோகத்தில் இருக்க முடியாது. யோகி குழந்தைகளின் நடத்தை மிகவும் ராயலாக, சிறப்பாகவும் இருக்கும். யோகி குழந்தைகள் யக்ஞத்தின் எழும்பு தேய சேவை செய்வார்கள்.

189. சேவாதாரி குழந்தைகளுக்காக பாபாவின் கட்டளை... யாதெனில், இனிமையான குழந்தைகளே, ஓய்வு நல்லதல்ல, சேவையில் ஓடிக்கொண்டேயிருங்கள். மேகம் வந்து புத்துணர்வு ஏற்பட்டது, பிறகு போய் அனேக பேரை புத்துணர்வு செய்யவேண்டும்.

190. அனைத்து விசயங்களையும் விடுத்து தமோபிரதானத்திலிருந்து சதோபிரதானம் ஆவதற்கான புருஷார்த்தம் செய்யுங்கள். முக்கியமாக பெண் விசயங்களில் தனது நேரத்தை வேஸ்ட் செய்யவேண்டாம். உங்களுடைய நேரம் மிகவும் விலை மதிப்புடையது. புயல்களால் பயம்கொள்ள வேண்டும். கஷ்டம் வரும், நஷ்டம் ஏற்படலாம். ஆனால் பாபாவின் நினைவு மறக்கக்கூடாது. இந்த முயற்சி செய்யுங்கள்.

191. 1) ஏதாவது ஏதாவது விசயங்களில் சந்தேகம், 2) மாயாவின் புயலலை பொறுத்துக் கொள்ள முடியாமை, 3) மகா எதிரியான காமத்தில் வசம் ஆவது போன்ற 3 காரணங்களால் படிப்பை விட நேரிடுகிறது. உயர்ந்திலும் உயர்ந்த பகவான் நமக்கு படிப்பு கற்றுக் கொடுக்க வந்துள்ளார் என்றபோதையிருந்தால், ஒருபொழுதும் படிப்பை தவறவிட முடியாது.

192. யார் ஞான காஜானாவில் நிறைந்துள்ளார்களோ அவர்களே அதீந்திரிய சுகத்தில் இருக்க முடியும். யார் ஞானத்தை தனது வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வருகிறார்களோ, அவர்களே அனைவரைக் காட்டிலும் மிக உயர்ந்த செல்வந்தர்கள். ஒருவேளை ஞானதாரணை இல்லை எனில் ஏழ்மையானவர்களே.

193. இந்த சமயம் உலகத்தில், அழுக்காக்கக்கூடிய நம்பர் 1 விசயம் யாதெனில் சினிமா மற்றும் டி.வி. சிலருக்கு சினிமா பார்க்காமல் தூக்கம் வருவதில்லை. பாபா கூறுகிறார் ஆபாச சினிமா பார்ப்பவர்களுக்கு விகாரியாகாமல் இருக்கமுடியாது. குழந்தைகள் நீங்கள் அப்படிப்பட்ட சினிமா பார்க்கமுடியாது.

194. தன்னைத் தான் பாருங்கள் தனது திருஷ்டி கிரிமினல் உள்ளதா? ஒருவேளை, இப்பொழுதுவரை விகாரப்பார்வை இருக்கிறது என்றால் முழுமையாக 84 ஜென்மத்தில் வர முடியாது என்பதை புரிந்துகொள்வீர்கள். நரனிலிருந்து நாராயணன் ஆகமுடியாது. கண்கள்தான் அதிகமாக ஏமாற்றுகிறது. பாபா கூறும் அனைத்து விசயங்களுமே கண்களைத் தூய்மையாக்குவதற்கான யுக்தி அதாவது குழந்தைகளே, ஆத்மீக பார்வையினால் பாருங்கள். தேகத்தைப் பார்க்காதீர்கள். நான் ஆத்மா என்பதை உறுதியாக பயிற்சி செய்யுங்கள்.

195. பாபாவின் கட்டளை யாதெனில், அதிகாலை எழுந்து குளிப்பது முதலியன செய்துவிட்டு புத்துணர்வுடன் என்னை நினைவு செய்யுங்கள். யார் சரியான நேரத்தில் எழவில்லை அவர்களை தீயகுழந்தை என புரிந்து கொள்வார். நல்ல குழந்தைகள் மகாராஜா மகாராணி ஆவார்கள். ஏனென்றால் ஒவ்வொரு கட்டளையையும் பின்பற்றுகிறார்கள். தீயகுழந்தையோ குப்பையை கூட்டுவது நிச்சயம்.

196. இனிமையான குழந்தைகளே, நீங்கள் தேவதையாக வேண்டும் ஆகையால் மாயாவின் அவகுணத்தை தியாகம் செய்யுங்கள். கோபப்படுவது, தீய பார்வையால் பார்ப்பது, திருடுவது போன்றவை அனைத்தும் மகாபாவம்.

197. இனிமையான குழந்தைகளே, தொட்டாற்சுருங்கித்தனம்கூட (மென்மை) தேக அபிமானம். கோபித்துக் கொள்வது, அழுவது போன்றஅனைத்து அசுர சமஸ்காரமும், குழந்தைகளிடம் இருக்கக்கூடாது. துக்கம், சுகம், மானம்-அவமானம், அனைத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும்.

198. சேவையில் தொய்வு ஏற்படுவதற்கான காரணம் யாதெனில் தங்களுக்குள் அவகுணத்தை பார்ப்பது, தங்களுக்குள் கருத்து வேறுபாடு, மதபேதம், பிரிவினை இவையனைத்தும் தேக அபிமானம். நான் சம்பந்தப்பட்டவருடன் செல்லமுடியாது, இங்கு இருக்க முடியாது, இது அனைத்தும் தொட்டாற்சுருங்கித்தனம். பாபா கூறுகிறார், குழந்தைகளே ஆக்ஞாகாரி ஆகுங்கள், கட்டளை கிடைத்த உடன் ஆஜர் ஆகவேண்டும். எந்த விசயத்தையும் தட்டிக் கழிக்கக் கூடாது.

199. உள்ளம் மிக சரளமாக இருக்க வேண்டும். உள்ளுக்குள் அனுமானம் மற்றும் அகம்பாவத்தின் குப்பைகூளங்கள் இருக்கக் கூடாது.

200. புத்தியை சதா பரசிந்தனையிலிருந்து விடுவித்து வைத்துக் கொள்ளுங்கள். ஒருபொழுதும் யாருடைய பிரச்சனையையும் கேட்காதீர்கள், வர்ணனை செய்யாதீர்கள். சூட்சுமத்திலும் மற்றவரைப் பற்றிய விசயங்களை கேட்கும் ஆர்வம் கூடாது. மற்றவர்களைப் பற்றி அவதூறு கேட்கவும், செய்யவும் கூடாது.

201. யாராவது ஏதாவது விசயத்தில் நமக்கு அறிவுரை கொடுத்தால், அதை பாதுகாப்பாக

வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர ஏன் எரிந்து விழுகிறோம். ஒருவேளை அதை பற்றி கொஞ்சம் சிந்தனை ஏற்பட்டாலோ, வருத்தம் வந்தாலோ... ஏன் இப்படி சொன்னார்... என்று இருந்தாலே, இதுவும் தேக அபிமானம் தான். இவரால் எனக்கு நிந்தனை ஏற்பட்டது, நானும் திரும்ப இவர் குற்றத்தை வெளிப்படுத்துவேன், நிந்தனை செய்வேன், விசயங்களை கூறுவேன்... இதுகூட பழிவாங்கும் எண்ணம் இவற்றைநம் எண்ணத்தில்கூட வரவிடக்கூடாது. இப்படிப்பட்ட எண்ணங்கள், சிந்தனைகள் நம்மை சதோபிரதானம் ஆக்கவிடாது. நிந்தனை-புகழ், மானம்-அவமானம் இப்படிப்பட்ட விசயங்களில் தாக்கம் தன்மீது வரக்கூடாது.

202. ஒருபொழுதும் புகழ், பெருமையின் பிச்சைக்காரன் ஆகக்கூடாது. ஒருவேளை பெயர், புகழ், பெருமைக்காக சேவை செய்தால் அது கள்ளச்சந்தை (Block Market) வியாபாரம் போல் ஆகிவிடும். சத்திய வருமானத்தில் ஒருபொழுதும் தன்மானத்தின் ஆசை கலக்கக்கூடாது. சூட்சுமத்தில் எனக்கு மதிப்பு என்ன கிடைக்கும், எனக்கென்று எந்த மதிப்பும் கிடையாது, என்றஎண்ணம் கூட வரக்கூடாது. ஒருவேளை இந்த எண்ணம் இருந்தால் நான் சுத்தமான ஆத்மா அல்ல, பொய் கபடம் நிறைந்தவன் தான். இறைவனின் குழந்தை பெயர் புகழின் பின்சென்று குழம்பினால், அது கிடைக்காத பட்சத்தில் அழுது புலம்ப வேண்டியது வரும். அவர்களை இறைவனின் சத்திய குழந்தை எனக் கூறமுடியுமா?

203. குழந்தைகளின் ஸ்திதி அப்படியிருக்கவேண்டும், ஏதாவது நடந்துவிட்டால், அது சொப்பனம் போன்று ஒன்றுமில்லாததாக ஆகிவிடவேண்டும். எதுவும் புதிதில்லை (Nothing New) என்றசப்தம் கூட வெளிப்படக்கூடாது. பக்தியில் கூட கூறுகிறோம், "ஓ ராம்ஜி இந்த உலகத்தைப் படைக்கவே இல்லை என்றால் நாம் எந்த கடந்த விசயத்திற்கும் கவலைப்பட வேண்டியது இல்லை" என்பார்கள். இப்படி எந்த விசயமும் இல்லை. அதை சிந்திப்பதுகூட தண்ணீரைக் கடைவது மாதிரிதான். இதுகூட நேரத்தை வீணாக்குவதுதான். வீணான சிந்தனை செய்யும் பழக்கம் மனதைக் களைப்படையச் செய்கிறது.

204. மாயா சூட்சுமத்தில் மனதில் அனேக புயல்களை கொண்டுவருகிறது. கண்கள் மிகவும் ஏமாற்றம் செய்கிறது. சிலரின் அழகான உருவத்தைப் பார்த்ததும் பார்வை கெட்டுவிடுகிறது. நாக்கு புலம்புகிறது. இவையனைத்தும் மாயாவின் புயல். மாயா மிகப் பிரபலமானது. ஆகையால் பாபா குழந்தைகளுக்கு யுக்தியுடன் கூறுகிறார்... இனிமையான குழந்தைகளே தினமும் தனது கணக்குவழக்குகளை எழுதுங்கள். தன்மீது கவனம் கொடுங்கள். நிரந்தர ஆன்மா-அபிமானியாக இருப்பதற்கான பயிற்சி செய்யுங்கள். சகோதரா - சகோதரா பார்வையை உறுதி செய்யுங்கள். தேகத்தைப் பார்த்தாலும் ஆத்மாவை பாருங்கள். யாரையாவது பார்த்து புத்தி சஞ்சலமானால் அவரிடமிருந்து தூரமாக விலகிவிடுங்கள். ஒருவேளை எப்பொழுதாவது ஏதாவது கர்மேந்திரியம் ஏமாற்றிவிட்டால் உடனே பாபாவிடம் கூறுங்கள். சத்தியத்தை சொல்வதினால் பழக்கவழக்கம் விடைபெற்றுவிடும்.

205. அகண்ட யோகி ஆவதற்காக....

- யாருடைய தீயசகவாசத்திலும் ஒருபொழுதும் வரவேண்டாம்.
- மற்றவர்களின் அவகுணத்தைப் பார்த்தாலும் கேட்டாலும் கண்டு கொள்ளாதீர்கள் (Don't Care)
- விகாரத் தொடர்பு மற்றும் விகாரங்களிலிருந்து நீங்கள் மிகவும் விலகி இருக்க வேண்டும். சரீர நிர்வாகத்திற்காக காரியம் செய்யவேண்டும் ஆனால் சூத்திரர்களின் தொடர்பில் மிகவும் பாதுகாப்பாக இருக்கவேண்டும். தீய தொடர்பில் வந்து ஒருபொழுதும் கர்மேந்திரியங்களினால் எந்த விகர்மமும் செய்யாதீர்கள்.

206. யார் பாபாவின் சேவையில் முழுமையிலும் முழுமையான உதவியாளர்

ஆகின்றார்களோஅவர்களே சதா புன்முறுவலுடன் இருக்க முடியும். சதா ஸ்ரீமத் படி ஊக்கம் உற்சாகத்துடன் இருந்து, விஷ்வ கல்யாணகாரி ஆகவேண்டும். முற்றிலும், நிரகங்காரியாக இருங்கள். எந்த கடுமையான சுபாவம், சமஸ்காரமும் இருக்கக் கூடாது. சேவையில் கொஞ்சமும் சோம்பேறித்தனம் வரக் கூடாது. ஒருவேளை சிலர் செல்வத்தால் சேவை செய்ய முடியவில்லை எனில் ஸ்தூல சேவை செய்யவேண்டும். ஓய்வு உகந்ததல்ல, மிகவும் சாந்திமயமாக இருக்க வேண்டும்.

207. நல்ல குழந்தை பாபா போன்று இனிமையாக மற்றும் அன்பாக இருப்பர். கொஞ்சமும் அகங்காரம் இருக்காது. அவர்கள் சதா சுகமயமாக இருப்பார்கள். வாயினால் ஞான ரத்தினத்தைத் தவிர வேறு எதுவும் பேச மாட்டார்கள். தனது ஒவ்வொரு கர்மத்தினால் அம்மா-அப்பாவை வெளிக்காட்டுவார்கள். ஒருபொழுதும் சத்குருவிற்கு நிந்தனை செய்ய மாட்டார்கள். அவர்களுக்குள் எந்த அவகுணமும், கடுமைத்தன்மையும் இருக்காது. ஏதாவது விசயம் (பிரச்சனை) முன்னே வந்தாலும், அதை பரீட்சை என புரிந்து சாந்தியாக இருப்பார்கள். ஒருபொழுதும் தங்களுக்குள் சண்டையிடமாட்டார்கள்.

208. சத்திய பாபாவிடம் சத்தியமாயிருங்கள், தனது முழுமையான சார்ட் பாபாவிடம் வைத்து, பொய் பேசினால் அவர்களின் பாதுகாப்பு பாபாவால் செய்யமுடியாது. மறைப்பதால் பாவம் அதிகரிக்கும் ஆகையால் குழந்தைகளுக்கு உள்ளம் சுத்தமாக இருக்க வேண்டும்.

209. இனிமையான குழந்தைகளே, திருமணம் பற்றி எண்ணத்திலும் வரக்கூடாது. திருமணம் செய்தால், பிறகு சரீரத்தில் உள்ளம் ஈடுபட்டுவிடும். பாபா கூறுகிறார் இந்த பழைய செருப்பில் எந்த அன்பும் வைக்காதீர்கள். எந்த பெயர் ரூபத்திலும் உள்ளம் ஈடுபடவேண்டாம்.

210. வெளிப்படையான பாவம், துக்கம் கொடுப்பது, விகாரத்தில் செல்வது, கீழான பொருட்களை சாப்பிடுவது, சாராயம் குடிப்பது முதலியனவாகும். இப்பொழுது நீங்கள் இந்த கீழான பழக்கங்களை அழித்து விட்டால் மகான் ஆகிவிடலாம்.

211. பாபா கூறுகிறார்... இனிமையான பிராமணக் குழந்தைகளே! தங்களுக்குள் ஒருபொழுதும் சண்டையிடமாட்டோம், ஆன்மீக அன்புடன் இருப்போம் என்று உறுதிமொழி செய்யுங்கள். ஒருவேளை யாராவது சண்டையிடுகிறார்கள் என்றால் அழிவுதான். சண்டையிடுவது என்றால் அசுர சம்பிரதாயம். அவர்கள் பாபாவின் மரியாதையை இழக்க வைக்கிறார்கள், அவமரியாதை ஏற்படுத்துகிறார்கள், ஆகையால் கடைத்தேறமுடியாது. அவர்கள் சண்டாளரின் ஜென்மம் எடுப்பார்கள். தேக அபிமானத்தினால் கடுகடுப்பாக உப்புத்தண்ணீரைப் போல இருப்பர். ஆகையால் நீங்கள் அன்புக்கடல் பாபாவின் குழந்தைகள் அன்பை நிறைத்து கங்கையாகவும், மாறாக தலைகீழாக பேசாதீர்கள். யாரிடமும் கரடுமுரடாக (Ruff & ொ□□□) பேசுவது அசுர குணம். நீங்கள் மிகவும் இனிமையாக பேசவேண்டும். இனிமையாவதற்கான முயற்சி செய்யுங்கள். அப்பொழுதுதான் நல்ல மார்க் (மதிப்பெண்) கிடைக்கும்.

212. இப்பொழுது உங்களிடம் கேட்கும் சமஸ்காரம் இருக்க கூடாது. ஏனென்றால் பாபா இந்த சங்கமயுகத்தில் உங்களை காமதேனுவாக ஆக்கிவிட்டார். நீங்கள் பாபாவுக்கு சமமாக அனைவரின் மனஆசைகளை பூர்த்தி செய்யக்கூடியவராகவும். நீங்கள் தனக்காக எந்த ஆசையும் வைக்கவேண்டாம்.

213. நாம் ஈஸ்வரிய தாய் தந்தையின் அரவணைப்பில் இருக்கிறோம் என்பது யாருடைய

புத்தியில் இருக்கிறதோ அவர்களே முழுமையான சரண்டர். பாபா இவை அனைத்தும் உன்னுடையது, நீங்கள் தான் எங்களை வளர்ப்பவர்கள். எந்த வேலை பார்த்தாலும், அனைத்தும் பாபாவுக்கு உரியது என்றஎண்ணம், பாபாவுக்கு உதவி செய்து கொண்டு இருக்கும் குழந்தைகளே அர்ப்பண புத்தி உடையவர்கள். அவர்கள் சரீர நிர்வாகத்திற்காக வேலைகள் செய்தாலும் நிரந்தரமாக தாய்தந்தையை நினைப்பார்கள். உயர்ந்த பதவி அடைய நல்ல விதத்தில் படித்து, படிப்பிப்பார்கள்.

214. தனது இயல்பை மிகவும் இனிமையாக ஆக்கவும், மறந்தும்கூட யாருக்கும் துக்கம் கொடுக்காதீர்கள். தீயவார்த்தை பேசுவது, கோபப்படுவது, திட்டுவது இவையனைத்தும் துக்கம் கொடுப்பதுதான்.

215. தன்னை அழிவற்றஞான ரத்தினங்களின் கஜானாவினால் நிறைத்து அனேக ஆத்மாக்களுக்கு உயிர்பிச்சை கொடுப்பதுதான் முக்கிய புருஷார்த்தம். அவர்களே வெற்றிமாலையில் சுற்றப்படுவார்கள்.

216. நீங்கள் இறைவனின் நேரடிப் படைப்பு. உங்களிடம் சதா புன்முறுவலுடன் இருப்பதற்கான விசேடத்தன்மை அவசியம் இருக்கவேண்டும். இறைவனின் படைப்பான நமது வாயிலிருந்து சதா ஞான ரத்தினம் வெளிவரவேண்டும். நடத்தை மிகவும் ராயலாக இருக்கவேண்டும். பாபாவின் பெயர் அவப் பெயராக்கக்கூடிய நடத்தை இருக்கக் கூடாது. அழுவது, சண்டையிடுவது, தலைகீழான சாப்பாடு... இவை ஈஸ்வரீய குழந்தைகளின் லட்சணம் கிடையாது. ஈஸ்வரனின் குழந்தைகள் எனக் கூறப்படுபவர் அழுதாலோ ஏதாவது செய்யக்கூடாத காரியம் செய்தாலோ பாபாவின் மரியாதையை இழக்க வைக்கிறார்கள். ஆகையால் மிகவும், கவனமாக இருக்கவேண்டும். சதா ஈஸ்வரிய போதையில் புன்முறுவலுடன் இருக்கவேண்டும்.

217. இனிமையான குழந்தைகளே, தனது சமஸ்காரங்களை சம்பூர்ணபாவனமாக ஆக்குவதற்கு... தேகம், தேக அபிமானத்தின் அனைத்து சம்பந்தங்களை மறந்து தன்னை ஆத்மா என்றநம்பிக்கை வையுங்கள். நான் ஆத்மா சகோதரா - சகோதரா என்றபாடத்தை பக்கா (உறுதி) செய்யுங்கள்.

218. தங்களுக்குள் வீணான விசயங்களை பேசாதீர்கள். இதன்மூலம் வாயுமண்டலம் கெட்டுவிடுகிறது. யாரிடமாவது தவறைபார்த்துவிட்டால் பாபாவிடம் கூறிவிடுங்கள். இங்கேயும் அங்கேயும் வர்ணனை செய்யாதீர்கள்.

219. எப்படிப்பட்ட கர்மம் நான் செய்கிறேனோ என்னைப்பார்த்து மற்றவர்களும் செய்வார்கள். ஆகையால் ஒவ்வொரு கர்மத்தை யோசித்து புரிந்து செய்யுங்கள். படிப்பதில் ஒருபொழுதும் சோம்பேறியாக ஆகாதீர்கள்.

220. குழந்தைகளே, இந்த பழைய உலகத்தைப் பார்த்தாலும், பார்க்காதீர்கள். இந்த உலகில் எந்த பொருளும் ஒரு வேலைக்கும் உதவாது. அனைத்தும் தீயிற்கு இரையாகி விடும். ஆகையால் இதிலிருந்து பற்றைநீக்குங்கள்.

221. மாயாவின் ஏமாற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக ஆசை என்றால் என்னவென்று அறியாதவர் (இச்சா மாத்திரம் அவித்யா) ஆகவேண்டும். இந்த அழுக்கான உலகினில் உள்ளத்தை ஈடுபடுத்தாதீர்கள். எந்த ஆசையும் வைக்காதீர்கள்.

222. அனைத்தைக் காட்டிலும் உயர்ந்த நடத்தை யாதெனில், பவித்திரம். ஆகையால் பவித்திர தன்மைக்கு முழுமையிலும் முழுமையாக முதல்தரமாகச் சான்று கொடுக்க வேண்டும். தனக்கு தானே முன்னேறபவித்திரமாக அவசியம் ஆகவேண்டும்.

223. இந்த ஜென்மத்தில் எந்த ஒரு கர்மத்தையும் மறைக்காதீர்கள். மறைத்தால் பாவம் அதிகரிக்கும். பாபாவுடன் யோகம் துண்டித்துவிடும். ஆகையால் சத்தியமான குழந்தைகள் பாபாவிடம் சத்தியமாக இருக்க வேண்டும்.

224. குப்த ஞானத்தில் சிந்தனை செய்து சதா புன்முறுவலுடன் இருக்கவேண்டும். தேவதைகளின் சித்திரத்தை முன்னே பார்த்தாலும் அவர்களுக்கு மந்திரமும்

வந்தனமும் செய்வதற்கு பதிலாக அதைப் போன்று ஆகுவதற்கான தெய்வீக தாரணை செய்யவேண்டும்.

225. வாயினால் சதா இனிமையான வார்த்தை பேசவேண்டும். ஞானரத்தினத்தையேதான் பேசவேண்டும், கேட்க வேண்டும். வாயினால் கடுமையான கல் வெளிப்படக்கூடாது.

226. சேவையில் ஒருபொழுதும் களைப்படையக்கூடாது. நம்பிக்கை வைத்து ஆர்வத்தோடு சேவை செய்யவேண்டும். சதா சந்தோசமாக இருக்க வேண்டும். ஒருபொழுதும் மனச்சோர்வு இருக்கக்கூடாது.

227. இகழ்ச்சி-புகழ்ச்சி, துக்கம்-சுகம், குளிர்ச்சி-வெப்பம் ஆகியவற்றில் சமமாக இருக்க வேண்டும். தனது ஸ்திதியை ஏக்ரஸ்ஸாக ஆக்க வேண்டும்.

228. குழந்தைகளே, பரச்சிந்தனை இறங்கும்கலைக்கு ஆதாரம். ஆத்மச்சிந்தனை முன்னேற்றத்தின் ஏணிப்படி. ஆகையால் பரச்சிந்தனையை விடுத்து ஆத்மச்சிந்தனை செய்ய வேண்டும். வீணான சிந்தனையில் நேரத்தை வீணாக்காதீர்கள்.

229. தீயதை கேட்காதீர்கள், பார்க்காதீர்கள், பேசாதீர்கள். எந்த விசயம் வேலைக்கு உதவாதோ அதை கேட்டும் கேட்காது செய்து விடுங்கள். தனது ஸ்திதியை கெடுத்து விடவேண்டாம்.

230. சதோபிரதானம் ஆகுவதற்காக ஜின் பூதம் போன்று நினைவுக்கான ஏணிபடி ஏறவேண்டும், இறங்க வேண்டும். நினைவுக்கான யாத்திரையில் ஒருபொழுதும் களைப்படைய வேண்டாம்.

231. குழந்தைகளே, நீங்கள் ஒருபொழுதும் தனது கைகளில் சட்டத்தை எடுக்கக் கூடாது. எங்காவது ஏதாவது தவறு ஏற்பட்டாலோ, குறையை யாரிடமாவது பார்த்தாலோ, பாபாவுக்கு செய்தி கொடுத்துவிடவும். ஏனெனில் குறைகளை வெளியேற்றும் ஒப்பந்தம் (Contract) பாபா எடுத்துள்ளார். இது குழந்தைகளின் வேலை அல்ல. ஆகையால் தங்களுக்குள் குறைகளின் வர்ணனை செய்யாதீர்கள்.

232. ஒருபொழுதும் தங்களுக்குள் அல்லது பாபாவிடம் கோபித்துக் கொண்டு படிப்பை விடக்கூடாது. யாரிடமும் கோபப்படக் கூடாது. முரளியை ஒருபொழுதும் தவறவிடக் கூடாது.

233. நீங்கள் யாரையும் நிந்தனை செய்யக்கூடாது. நிந்தனை செய்வதால் நேரம் வீணாகிறது. அதற்குப் பதிலாக அன்பாக பாபாவை நினைவு செய்தால் அதிக லாபம். நிந்திப்பவர்கள் நமது உற்றநண்பன்... இதை நினைவில் வையுங்கள்.

234. சூட்சுமவதனவாசி பரிஸ்தா ஆகுவதற்குக்காக இந்த ஆன்மீக சேவையில் ததீஷி முனிவர் போன்று எலும்பையும் ஸ்வாகா செய்ய வேண்டும். இந்த யக்ஞும் உங்களுக்குப் பிடித்தமான பலனைத் தருகிறது. ஆகையால் யக்ஞுத்தில் அன்பாக சேவை செய்ய வேண்டும்.

235. வினாசத்திற்கு முதலிலேயே தனது பழைய பெட்டிபடுக்கைகள் அனைத்தையும் மாற்றிவிட வேண்டும். புது உலகத்திற்காக அனைத்தையும் முன்காப்பீடு (Insure) செய்துவிட வேண்டும்.

236. குழந்தைகளாகிய உங்கள் வாயிலிருந்து ஒருபொழுதும் துக்கமான வார்த்தையான ஹே ஈஸ்வரா, ஹே பகவான் அல்லது ஹே பாபா என்று கூட வரக்கூடாது. நீங்கள் ஆஹா பாபா, ஆஹா டிராமா, ஆஹா ஆஹா என்றபாடல் பாடிக்கொண்டு சதா புன்முறுவலுடன் இருக்க வேண்டும்.

237. குழந்தைகளே நீங்கள் இப்பொழுது இந்த பழைய உலகத்திலிருந்து இறந்துவிட்டீர்கள். இது மறுஜென்மம். ஆகையால் வெள்ளை உடை மரணத்தை உறுதி செய்கிறது.

238. குழந்தைகள் நீங்கள் இப்பொழுது வனவாசத்தில் உள்ளீர்கள். இங்கு எந்த பேஷனும் (அலங்காரம்) செய்யவேண்டாம். மிகவும் சாதாரணமாக இருக்க வேண்டும்.

239. லௌகீக சம்பந்தத்தை கவனமாக வழி நடத்த வேண்டும். மிகவும் யுக்தியுடன் நடத்த வேண்டும். சகோதரன் - சகோதரன் பார்வையின் பயிற்சி செய்து விகாரப் பார்வையை அழிக்க வேண்டும்.

240. இல்லறத்தில் இருந்தாலும் பொது நலத்தை பார்க்க வேண்டும். லௌகீக சம்பந்தத்தில் மருமகளை மருமகள் என்றும் மாமியாரை மாமியார் என்றுதான் கூறுவார்கள். ஞானம் குப்தமானது. சம்பந்தமும் குப்தமானது. இதை நீங்கள் தான் அறிவீர்கள். ஆகையால் கணவரை சகோதரன், மாமியாரை சகோதரி என்றும் கூறக்கூடாது. இதனாலும் சேவைக்கு களங்கம் ( disservice) ஏற்பட்டு விடுகிறது. ஒருவர் மற்றவர்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும்.

241. நீங்கள் அனைத்து கீழான பழக்கத்தையும் விட்டு விட வேண்டும். தொடர்பில் நிறமானது அதிகமாக தீர்க்கத்தை ஏற்படுத்துகிறது. சந்தோஷத்தில் வந்து ஒரு முறையும் புகையிலை முதலியன குடிப்பதில் குஷி கண்டுவிட்டால் அது பழக்கமாக மாறிவிடும். ஆகையால் தொடர்பில் பாதுகாப்பாக இருக்கவேண்டும்.

242. எப்படிப்பட்ட பயங்கரமான பிரச்சனை முன்னே வந்தாலும் "எதுவும் புதிதல்ல" என புரிந்து கடக்க வேண்டும். குழம்புவது, பயப்படுவது கூடாது. கல்யாணகாரி பாபா மற்றும் கல்யாண காரியுகம்... இந்த நினைவில் பயமற்று இருக்க வேண்டும்.

243. குழந்தைகளே, வகுப்பிற்கு தினமும் செல்வதால் புதுப்புது கருத்துக்கள் (Points) கிடைக்கிறது. ஆனால் அதிகமான மழையோ, ஊரடங்கு சட்டமோ ஏற்பட்டால் நீங்கள் போகமுடியாத பொழுது வீட்டிலிருந்து இருந்து கொண்டே பாபாவையும் ஆஸ்தியையும், நினைக்க வேண்டும். பந்தனம் என்றாலும் வீட்டில் அமர்ந்து கொண்டு பாபாவை நினைவு செய்ய வேண்டும்.

244. நீங்கள் அனைவருக்காகவும் சுபபாவனை வைக்க வேண்டும். இரக்க உள்ளமுடன் தன்னுடைய சகோதர ஆத்மாக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்கு சத்திய மரியாதை கொடுக்க வேண்டும்.

245. நாம் ஒரு வழி, ஒரு தர்மம், ஒரு ராஜ்ஜியத்தின் ஸ்தாபனைக்கு நிமித்தம் என்றநினைவு சதா இருக்கவேண்டும். ஆகையால் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒரு பொழுதும் மதபேதத்தில் வரக்கூடாது. தங்களுக்குள் குரூப்ஸ் (Parties) உருவாக்கக் கூடாது.

246. நீங்கள் யாருடனும் பகைமை பாராட்டக் கூடாது. உங்களுடைய மிகப்பெரிய பகைவன் இராவணன். அவன் மீது வெற்றி அடைய வேண்டும்.

247. உங்களுடைய உள்ளத்தை கொள்ளை கொண்டவர் ஒரு பாபா, ஆகையால் உள்ளத்தின் விசயங்களை ஒரு பாபாவிடம் கூறவேண்டும். எந்த தேகதாரியிடமும் கூறவேண்டாம். ஒரு பாபாவிடம் சத்திய அன்பு வைக்க வேண்டும்.

248. சதா தந்தையையே பின்பற்றி (Follow Father) மனம், சொல், செயலால் துல்லியமாக (accurate) ஆகவேண்டும். சூத்திரர்களின் தொடர்பில் வந்து தனது பிராமணர் குலத்தை மறக்கக்கூடாது. ஒரு பொழுதும் குலக்களங்கம் செய்யக்கூடாது.

249. ஒவ்வொரு கர்மத்தையும் கர்ம யோகி ஆகி செய்ய வேண்டும். எட்டு மணி நேரம் சரீர நிர்வாகத்திற்காக வேலை செய்ய வேண்டும். ஆனால் குறைந்த பட்சம் எட்டு மணி நேரம் பாபாவை நினைவு செய்ய வேண்டும்.

250. ஞான ரத்தினங்களின் கடையைத்திறந்து சத்திய வருமானம் ஈட்ட வேண்டும். மற்றவர்களையும் செய்ய வைக்க வேண்டும். இதில் தனது சமயத்தை வெற்றியுடையதாக ஆக்க வேண்டும். ஒரு பாபாவிடம் அழிவற்றசத்திய வியாபாரம் செய்ய வேண்டும்.

251. பைசா இருந்தால் மூன்றடி நிலம் வாங்கி சென்டர் திறக்கவும். தனக்காகவும் கட்டிடம் கட்டுங்கள். ஓய்வாக இருங்கள். கூடவே எப்படி தர்மத்திற்காக பக்தியில் ஓதுங்கினோமோ அப்படி இப்பொழுது பாபாவின் நேரடி சேவையில் தனது அனைத்தையும் வெற்றியுடையதாக்கி விடுங்கள்.

252. யாரேனும் எவ்வளவு தான் கொடுமை, தொல்லை செய்தாலும், நீங்கள் பவித்திரமாக அவசியம் ஆக வேண்டும். எந்த விசயத்திற்கும் பயப்படவேண்டாம். பிரச்சனைகளில் பயமற்றவராகி எதிர்கொள்ளவேண்டும். இல்லறவாழ்வில் தாமரை மலர்போல் இருக்கவேண்டும்.

253. குழந்தைகளின் திருமணம் ஆபத்துதான்... ஆனால் சில குழந்தைகள் ஞானத்தில் இல்லை என்றால் அவர்களை இந்த உலகத்தில் செல்ல விடுங்கள். மற்றபடி குழந்தை பாபாவின் வழியை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் தனது வருமானத்திலே மட்டும் தனது பரிவாரத்தை வழிநடத்த வேண்டும். நீங்கள் நஷ்டமோகாவாக ஆகவேண்டும்.

254. ஒருவேளை திருமணம் ஆனபிறகு ஞானம் கிடைத்தாலோ, திருமணம் செய்துதான் ஆகவேண்டும் என்றாலோ மகாவீரர் ஆகி காட்ட வேண்டும். இருவரும் கூடவே இருந்தாலும பாலபிரம்மச்சாரியாக இருக்கவேண்டும். இலக்கு மிக உயர்ந்து அதைவிட பிராப்தி மிக உயர்ந்தது.

255. சிவபாபாவை தனது சத்திய வாரிசு ஆக்குங்கள். என்ன உங்களிடம் உள்ளதோ அதை அவரிடம் கொடுத்துவிடுங்கள். அவர் 21 ஜென்மங்களுக்கு உங்களிடம் பலியாகிவிடுவார்.

256. நீங்கள்அனைவர்மீதும் மரியாதை வைக்கவேண்டும். பேசுவதற்குக்கூட கலையை கற்றுக்கொள்ள வேண்டும். முதலில் "தாங்கள்" என்று கூறி விசயம் பேசவேண்டும். சிறியவர்கள் என்றாலும் பெரியவர்கள் என்றாலும் அனைவருக்கும் மதிப்பு கொடுப்பது நமது கடமை.

257. யக்ஞத்தின் ஸ்தூல சேவையில் எலும்பு கொடுக்கவேண்டும். அன்பாக சமைத்து பரிமாறவேண்டும். இதுவும் ஒருபாடம்தான். இதற்கும் மதிப்பெண் கிடைக்கிறது. ஆனால் வாயினால் ஞான ரத்தினமும் அவசியம் வெளிவரவேண்டும்.

258. மிகவும் இனிமையான மரத்திற்கான நாற்று நடப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையால் மிகவும் இனிமையாக இருக்கவேண்டும். எப்படி தேவதைகள் இனிமையானவர்களோ அதுபோன்று இனிமையாக இருக்கவேண்டும்.

259. இந்த எல்லையற்றநாடகத்தில் ஆத்மா அபிமானியாகி ஹீரோபார்ட் நடிக்க வேண்டும். மற்றவர்களின் பாகத்தில் நீங்கள் பொறாமைப்படக்கூடாது. புருஷார்த்தத்தில் போட்டி போடலாம். பொறாமைப்படக் கூடாது.

260. ஒவ்வொருவருக்கும் அழிவற்றபாகம் என்பதை அறிந்து சதா கவலையற்று இருக்கவேண்டும். ஆனது ஆக்கப்பட்ட நாடகம் நடந்துகொண்டிருக்கிறது. இதில் ஆடாத மனநிலை இருக்கவேண்டும்.

261. சேவையில் ஆனந்தமாக இருக்கவேண்டும். உள்ளம் மற்றும் மனதார சேவைகள் செய்ய வேண்டும். சேவையில் ஒருபோதும் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. சதா ஈஸ்வரிய சேவையில் ஈடுபாட்டுடன் இருக்கவேண்டும்.

262. பாபாவுடையவரானபின்பு எந்த பிரச்சனையிலும் கோபப்படக்கூடாது. கோபமும் மிகப்பெரிய பூதம் இதன்மீது வெற்றியடைய வேண்டும். மனதின்மூலமும் யாருக்கும் துக்கம் கொடுக்கக்கூடாது. இந்த ருத்ர ஞான யக்ஞத்தில் தடைரூபம் ஆகக்கூடாது.

263. யாருடைய உள்ளத்தையும் துன்பப்படுத்தக்கூடாது. வாயிலிருந்து சதா ரத்தினம்

வரவேண்டும். மிகவும் ராயலாக நடந்து கொள்ளவேண்டும்.

264. நீங்கள் ஞானமழை பொழிபவராக இருக்கவேண்டும். தங்களுக்கு சமமாக ஆக்கும் சேவை செய்யவேண்டும். மேலும் பாபாவையும் நினைவு செய்யவேண்டும்.

265. எப்பொழுதும் நல்ல சேவாதாரி மாணவனின் தொடர்பில் இருக்கவேண்டும். தவிர ஞானம், யோகத்திற்குப் பதிலாக தலைகீழான விசயங்களையோ, வாயினால் ரத்தினங்களுக்குப் பதிலாக கற்கள் வெளிப்பட்டாலோ அல்லது யாரையாவது திட்டினாலோ அவர்கள் தொடர்பில் தன்னை மகவும் பாதுகாப்பாகவும் கவனமாகவும் வைத்துக் கொள்ளவேண்டும்.

266. தேகதாரியின் பெயர், ரூபத்தை நினைவு செய்யவேண்டாம். பெயர், ரூபத்தின் நோய் எலி உருவத்தில் வரும் மாயாஜாலம். இதில் ஒரு பொழுதும் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

267. தங்களுக்குள் பாற்கடல் போன்று இருக்க வேண்டும். ஒரு பொழுதும் உப்புத்தண்ணீர் ஆகி சேவைக்கு பங்கம் (Disservice) விளைவிக்காதீர்கள்.

268. எப்படி பாபா மற்றும் தாதா இருவரும் நிர்அகங்காரியாக இருக்கிறார்கள் எந்த அகங்காரமும் கிடையாது. மிகவும் சாதாரணமாகவும் இருக்கிறார்கள். நான் உங்களின் கீழ்படிந்த சேவகன் ( Obedient Servant) என்று கூறுகின்றார். அதே போன்று நீங்களும் நிர்அகங்காரியாக இருக்க வேண்டும். யாரிடமும் சேவை வாங்கக் கூடாது.

269. குழந்தைகளே தேக அபிமானத்தில் வருவதால் மற்றஅனைத்து விகாரங்களும் வந்துவிடுகிறது. சண்டை சச்சரவு இவையனைத்தும் தேக அபிமானம் நீங்கள் தேகி அபிமானி ஆக வேண்டும். எந்த பொருளின் மீதும் ஆசை வைக்காதீர்கள். நன்றாக உடுத்த வேண்டும். நன்றாக சாப்பிட வேண்டும். இவை அனைத்து ஆசைகளையும் அழித்து விட வேண்டும்.

270. மாயாவை குறைகூறாமல், தனது குறைகளை சூட்சமத்தில் சோதனை செய்து வெளியேற்றவேண்டும். உள்ளுக்குள் சூட்சுமத்திலும் காம விகாரத்தின் போதை இருக்க கூடாது. காமம் மகா சத்ரு. இதன் மீது வெற்றி அடைந்தால்தான் ஜெகத்தை வெல்லலாம்.

271. பாபாவிடம் உள்ளும் புறமும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளம் சுத்தமாக இருந்தால் இறைவன் குடிகொண்டிருப்பார். ஈஸ்வரிய பரிவாரத்திடமும் சத்திய அன்பு வைக்க வேண்டும்.

272. ஆங்காங்கே கேட்ட விசயங்களில் ஒருபொழுதும் நம்பிக்கை வைக்காதீர்கள். தலைகீழான விசயங்கள் யாராவது சொன்னால் ஒரு காதில் வாங்கி, மறுகாதில் விட்டு விட வேண்டும். புத்தியில் மனவழி (மன்மத்) மற்றும் மற்றவர் வழியின் (பரமத்) தாக்கம் (பிரபாவம்) இருக்கக்கூடாது.

273. படிப்பு வருமானம் ஈட்டும் வழி (Source of Income). இந்த படிப்பினால் மனிதனிலிருந்து தேவதையாக ஆகிறீர்கள். ஆகையால் எப்பொழுது வரை வாழ்கின்றோமோ அப்பொழுது வரை படிப்புப் படிக்க வேண்டும். இறுதி வரை கற்க வேண்டும். எல்லாம் தெரிந்தவராக (மியாமிட்டு) நினைத்து தன்னை புத்திசாலியாக கருத வேண்டாம்.

274. டாக்டரிடம் அடி அடியில் வழி கேட்க வேண்டும் ஏதாவது மனதின் உள்வியாதி என்றால் பாபாவிடம் சத்தியத்தை கூறவேண்டும். ஏதாவது தவறு இருந்தால் பாபாவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். பிறகு திரும்ப செய்ய மாட்டேன் என்ற உறுதிமொழி செய்யவேண்டும்.

275. தினமும் ஏதாவது ஏதாவது புண்ணிய காரியம் அவசியம் செய்ய வேண்டும். யாருக்காவது பாபாவின் சரியான அறிமுகத்தை தருவது மற்றும் அனைவருக்கும் பாபாவின் நினைவை அளிப்பது தான் அனைத்தையும் காட்டிலும் மிகப்பெரிய புண்ணிய காரியம்.

276. ஏதாவது விசயத்தில் வாக்குவாதம் செய்வதில் தனது நேரத்தை வீணடிக்காதீர்கள். நீங்கள் சாஸ்திரவாதிகளிடமும் சாஸ்திரத்தை பற்றி வாதவிவாதம் செய்ய வேண்டாம்.

277. இப்பொழுது வீடு செல்ல வேண்டும். ஆகையால் பழைய உலகத்திலிருந்து புத்திக்கான கணக்கை முடித்து ஓய்வாக இருக்க வேண்டும். யாரையும் முள் போன்று குத்தாதீர்கள்.

278. சத்திய பாபா எதை கூறுகின்றாரோ அதை கண்களை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்வதில் தான் தனக்கு நன்மை. ஆகையால் எந்த விசயமானாலும் சந்தேகம் எழ வேண்டாம். ஒரு பொழுதும் குழப்பம் அடையவேண்டாம்.

279. வியாதி எனில் ஒரு பாபாவை நினைவு செய்ய வேண்டும். சரீரத்தில் பற்று வைக்காதீர்கள். குஷி குஷியாக கர்ம வினையென புரிந்து பழைய கணக்கு வழக்குகளை முடிக்க வேண்டும். அய்யோ அய்யோ எனக் கூறவேண்டாம்.

280. மனிதனிலிருந்து தேவதை ஆக வேண்டும். ஆகையால் தனது குடிப்பது - சாப்பாடு மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். அசுத்த உணவை தியாகம் செய்து சத்திய வைஷ்ணவராக ஆக வேண்டும்.

281. பாபா மூலம் என்ன சுகம், சாந்தி, பவித்திரமான பொருள் கிடைத்ததோ அதையனைத்தையும் தானம் செய்ய வேண்டும். தானம் கொடுப்பதில் கஞ்சத்தனம் வேண்டாம். முதலில் பாபாவிற்கு முன் விகாரத்தை தானம் செய்துவிட்டு பிறகு அழிவற்றஞான செல்வத்தை தானம் செய்யுங்கள்.

282. இந்த ஈஸ்வரிய ஜென்மம் விலைமதிப்பற்றது. வைரம் போன்றது. இந்த வாழ்க்கையில் ஆத்மா மற்றும் சரீரம் இரண்டையும் பாவனமாக்கவேண்டும். ஆகையால் இதனால் ஒருபொழுதும் தொல்லையடைய வேண்டாம். இதைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும். மற்றபடி பற்றுவைக்க வேண்டாம்.

283. ஆன்மீக சமுதாய தொண்டன் (Spiritual Social Worker) ஆகி சத்தியசேவை செய்யவேண்டும். அனைவரையும் ஆன்மீக யாத்திரை செய்விக்க வேண்டும்.

284. குழந்தைகள் நீங்கள் டபுள் அஹிம்சாதாரி ஆகவேண்டும். காம மற்றும் கோபவிகாரத்தின் வசமும் கோபத்தின் வசமும் ஆகி துக்கத்தைக் கொடுக்கக்கூடாது. கோபம் கொள்வது மிகப்பெரிய ஹிம்சை.

285. சாப்பாடு சதா பாபாவின் நினைவில் திருஷ்டி கொடுத்து சாப்பிட வேண்டும். சாப்பிடும் போது தங்களுக்குள் பேசக் கூடாது. அலுவலகத்தில் நேரமிருப்பின் அசரீரி ஆகும் அப்பியாசம் செய்யவேண்டும்.

286. நீங்கள் ஆன்மீக ஒளிவிளக்கு. அனைவருக்கும் வீட்டிற்கான வழியைக் காட்ட வேண்டும். உங்களின் புத்தியில் சதா சுயர்சன சக்கரம் சுழன்று கொண்டிருக்கவேண்டும். முகம் சதா குஷியாக இருக்கவேண்டும்.

287. நீங்கள் நடைப்பயிற்சி (Walking) செய்யும்பொழுது அமைதியாக பாபா நினைவில் போகவேண்டும். நினைவில்தான் போட்டி இருக்கவேண்டும். எப்படி பாதிரியார்கள் அமைதியாகப் போவதுபோல் நீங்கள் அமைதியாக இருக்கவேண்டும்.

288. இந்த சமயம் மிகவும் முக்கியமானது. ஆகையால் எந்த தலைகீழான கர்மமும்

செய்யவேண்டாம். கர்மம் - அகர்மம் - விகர்மத்தின் நிலையை கவனத்தில் வைத்து சதா சிரேஷ்ட கர்மம்தான் செய்யவேண்டும்

289. டிராமாவில் முழுமையான நம்பிக்கை வைத்து கவலையற்று இருக்கவேண்டும். யார் சரீரம் விட்டாலும் உங்கள் கண்ணில் இருந்து கண்ணீர் வரக்கூடாது. ஆத்மா ஒரு சட்டையை மாற்றி மற்றொரு பாகத்திற்குச் சென்றுவிட்டது. ஆகையால் அழவேண்டாம்.

290. அனைத்து சம்பந்தங்களின் இனிப்பு ஒரு பாபா. அவர்தான் சர்வ சம்பந்தங்களின் அன்பைத் தருகிறார். ஆகையால் தேகதாரிகளிடம் உள்ளத்தின் அன்பு வைக்காதீர்கள். அனைத்து சம்பந்தத்தையும் ஒரு பாபாவிடம் இணையுங்கள். "எனக்கென்று ஒரு சிவபாபா இரண்டாவது யாருமில்லை..." இந்தபாடத்தை உறுதி செய்ய வேண்டும்.

291. சார்ட் எழுத வேண்டும். எவ்வளவு நினைவு பழக்கமாகின்றதோ அவ்வளவு விகர்மம் வினாசம் ஆகிவிடும். கர்மாதீத்ய நிலை சமீபம் வந்துகொண்டிருக்கிறது.

292. குழந்கைளே, மாயாவின் புயல் அதிகமாக வரும். சங்கல்பம் விகல்பங்களில் தொல்லை செய்யும். இது மிகப்பெரிய குத்துச்சண்டை. ஆனால் நீங்கள் தோல்வியுறக்கூடாது. கர்மஇந்திரியத்தின் மூலம் எந்த விகர்மமும் செய்யக்கூடாது. யோகத்தினால் கர்மத்தை சீத்தலமாக்க வேண்டும்.

293. ஒவ்வொருவரும் தனது உடல் மனம், பொருளை, பாரதத்தை சொர்க்கமாக்கும் சேவையில் வெற்றியுடையதாக்க வேண்டும். யார் எவ்வளவு செய்வார்களோ அவ்வளவு உயர்ந்த பதவி அடைவார்கள்.

294. நீங்கள் முழுமையான ஜனோபகாரி, தயாளுவாக (Philanthropist) ஆகவேண்டும். எப்படி பிரம்மாபாபா மகாதானியாகி தனது அனைத்தையும் பலி செய்துவிட்டார். அதேபோன்று பாபாவை பின்பற்றவேண்டும்.

295. பாபாவிடம் ஒருபொழுதும் ஆசீர்வாதம் மற்றும் கிருபை கேட்காதீர்கள். தனது முயற்சியினால் தனக்குத்தானே ராஜ்யதிலகம் கொடுத்துக்கொள்ள வேண்டும். தனக்குத்தானே தகுதியாக்கிக் கொள்ளவேண்டும்.

296. நீங்கள் சத்திய கதையை கேட்க வேண்டும். சொல்லவும் வேண்டும். ஆன்மீக சேவையை பின்பற்றி (காப்பி, Copy) செய்யவேண்டும். சேவையில் தன்னை பிஸியாக வைத்துக்கொள்ளவேண்டும்.

297. டிராமாவில் உங்களுக்கு ஆடாத, அசையாத நிலையை உருவாக்க ஞானம் கிடைத்திருக்கிறது. புருஷார்த்தத்தில் டிராமா எனச் சொல்லி நின்றுவிடவேண்டாம். முயற்சி அவசியம் செய்யவேண்டும். டிராமாவில் இருந்தால் செய்வோம் என்று இருக்கக்கூடாது.

298. நீங்கள் தானம் யோசித்து புரிந்து செய்யவேண்டும். பணத்தால் கொடுக்கல் வாங்கல் பாவ ஆத்மாக்களுடன் செய்யக்கூடாது. யாருக்காவது பணம் கொடுத்துவிட்டால் அவர் அதன்மூலம் சாராயம் குடித்தலோ தீயகாரியம் செய்தாலோ அந்தப்பாவமும் உங்களிடம் வந்துவிடும். ஆகையால் சிவபாபா உங்களுடைய பெரியதிலும் பெரிய பணக்காரர். இரண்டுபிடி அவுல் கொடுப்பதால் அவர் மூலம் மாடமாளிகை கிடைத்துவிடும்.

299. நீங்கள் வியாசரின் குழந்தைகள். சத்தியத்திலும் சத்தியமான சகாதேவன். நீங்கள் அனைவருக்கும் சுகம் கொடுக்கவேண்டும். சத்திய கதை சொல்லவேண்டும். பிறகு தாரணை செய்யவேண்டும். வெறும் பண்டிதராக மட்டும் ஆகவேண்டாம்.

300. அந்தர்முகி ஆகி ஆன்மீக ராயல்தன்மையுடன் இருக்கவேண்டும். தனது

எண்ணங்கள் மிக ராயலாக இருக்கவேண்டும். பழைய உலகத்தின் வீணான விசயங்களில் புத்தி போகக் கூடாது. அனேக பேருக்கு மங்களம் செய்வதற்காக ராயலான யுனிவர்சிட்டி திறக்கவேண்டும்.

301. ஒவ்வொருவரிடமிருந்தும் குணத்தை கிரஹித்து குணம் நிறைந்தவராக வேண்டும். டிரஸ்டியாகி அனைத்தையும் பாதுகாக்கவேண்டும்.

302. பிச்சைகாரனிலிருந்து பிரின்ஸ் ஆவதற்காக தனது தேகத்திலிருந்து பிச்சைக்காரன் ஆகவேண்டும். டிரஸ்டி ஆகி அனைத்தையும் பாதுகாக்கவேண்டும்.

303. ஒரு பாபாவை முழுமையாக சார்ந்திருக்கவேண்டும். சுதந்திரமாக இருக்கும் சமஸ்காரத்தை அழிக்கவேண்டும். சத்தியத்திலும் சத்தியமாக பிதாவரதன் ஆகவேண்டும்.

304. குடும்ப பரிவாரத்தில் இருந்தாலும் சரியாக சட்டத்திட்டப்படி நடக்கவேண்டும். பெரியவர்களிடம் அன்பாக இருக்கவேண்டும். வாயிலிருந்து இனிமையாக அருமையான வார்த்தைகள் வெளிவர, அதைக்கேட்டு அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். நண்பர்கள் உறவினர்களிடம் மிகவும் பணிவுடன் அன்பு பாவனையுடன் சிரித்துக் கொண்டே பேசவேண்டும். இதன்மூலம்தான் பிரபாவம் ஏற்படும்.

305. குழந்தைகளே, அதிகாலை எழுந்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். பக்தர்கள்கூட அதிகாலை எழுந்து பக்தி செய்கிறார்கள். நீங்கள் அமிர்தவேளையில் எழுந்து ஞானசிந்தனை செய்யுங்கள். பாபாவிடம் இனிமையிலும் இனிமையாகப் பேசுங்கள். அதிகாலையில் பயிற்சி செய்தால் முழுநாளும் குஷியிருக்கும்.

306. குழந்தைகளே, உங்களது பார்வை யாருடைய சரீரத்திலும் போகக்கூடாது. தன்னைத்தான் ஆத்மா எனப்புரிந்து ஆத்மாவிடம் பேசுங்கள். ஆத்மா அபிமானி ஆகுங்கள். நீங்கள் யாருடைய போட்டோவையும் வைத்துக் கொள்ளக்கூடாது.

307. படிப்பு மற்றும் தெய்வீக குணங்கள் மீது முழுமையான கவனம் தேவை. யாரிடமும் கோபத்துடன் பேசாதீர்கள். யாரிடமாவது கோபம் என்றபூதப்பிரவேசம் இருந்தால் அவர்களிடமிருந்து விலகிவிடுங்கள். அந்தபூதம் நம்மிடம் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

308. இராஜ்ஜியப்பதவி அடைந்துவிடுவதற்காக தனது நிலை, செயல்கள், நடத்தை அனைத்தும் சரியாக இருக்கவேண்டும். சொல்வதும் செய்வதும் சமமாக இருக்கவேண்டும்.

309. யாரிடமும் தீய விகாரப்பார்வை வைப்பது பெரியதிலும் பெரிய பாவம். ஆகையால் முழுநாளில்அப்படி ஏதாவது பாவம் செய்யவில்லைதானே என கணக்குவழக்கைப் பாருங்கள்.

310. நீங்கள் ஒருவர் மற்றவருக்கு பிரத்தியேகமாக கடிதம் எழுதக்கூடாது. இதனாலும் தேகதாரியிடம் அன்பு ஏற்பட்டுவிடுகிறது. தலைகீழான கர்மத்திலும் கணக்கு ஏற்பட்டு விடுகின்றது.

311. இனிமையான குழந்தைகளே, அதிகமாகப் பேசாதீர்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு அமைதியாக இருக்கவும். குறைவாகப் பேசுங்கள் மெதுவாகப் பேசுங்கள். அமைதியாக இருந்தால் (பேசாது) அதிக வருமானம்.

312. குழந்தைகளே, நீங்கள் ஒருபொழுதும் மிக சத்தமாக குலுங்கிக்குலுங்கிச் சிரிக்கக்கூடாது. இதுவும் ஒரு விகாரம். நீங்கள் சதா தேவதைகள் போன்று புன்முறுவலுடன் இருங்கள்.

313. உங்களுக்கு எப்படிப்பட்ட அன்பான உறவினர்கள் இருந்தாலும், அவர்களின் மீதும்

மோகத்துடிப்பு இருக்கக்கூடாது. நஷ்டமோகா ஆகவேண்டும். தன்மீதும், மற்றவர்கள் மீதும் இரக்கப்படவேண்டும்.

314. நீங்கள் எப்பொழுதும் உதாசீனம் ஆகக்கூடாது. உதாசீனமாவது என்றால் மாயாவின் அடிமையாவது என்று அர்த்தம். மனக்குழப்பம் (உதாசீனம்) வந்தால் நல்லதல்ல. ஞானம் நிறைந்த பாடல் கேளுங்கள். புத்துணர்வு ஆகிவிடும்.

315. குழந்தைகளே, படிப்பில் சதா சுறுசுறுப்புடன் இருங்கள். சோம்பேறியாகி சாக்குப்போக்கு சொல்லாதீர்கள். படிப்பில் அதிக வருமானம் இருக்கிறது. இதற்காக 6 அல்லது 8 மைலிலிருந்து ஓடி வரவேண்டும். சோம்பேறித்தனம் மிகத் தீய விகாரம். அது படிப்பைத் தடை செய்கிறது.

316. முதலில் நீங்கள் தனது வீட்டை முன்னேற்றுங்கள். தானம் தன்னகத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். பிறகு மற்றவர்களை முன்னேற்றுவதற்கான முயற்சி செய்யவேண்டும். வீட்டின் சூழ்நிலையை உண்மையான சொர்க்கமாக தோன்றும் அளவிற்கு உருவாக்க வேண்டும்.

317. குழந்தைகளே, சினிமா நரகம் போன்றது. அங்கு செல்வதால் புத்தி அழிந்து போகின்றது. ஆகையால் நீங்கள் தீய சினிமா பார்க்காதீர்கள். விணான உலகாய செய்திகளைக் கேட்காதீர்கள். தீய புத்தகம் படிக்காதீர்கள்.

318. உங்களுடைய சத்திய கீதை இந்த பேட்ஜ்தான். இதை சதா நீங்கள் அணிந்திருக்க வேண்டும். இதன்மூலம் படைப்பவருக்கு படைப்பின் முழுஞானம் கொடுக்க முடியும்.

319. குழந்தைகளே, ஏகாந்தப்பிரியராக ஆகிவிடுங்கள். சுற்றிப் பார்க்கச் சென்றால் ஏகாந்தத்தில் அமர்ந்து சத்திய நாயகனை நினைவு செய்யுங்கள். சுதர்சன சக்கரத்தைச் சுழற்றுங்கள்.

320. காட்சிப் பார்க்கவேண்டும் என்றஆசை வைக்காதீர்கள். இதிலும் எப்பொழுதாவது மாயாபிரவேசம் ஆகிறது. இவர் மீது மம்மா, பாபா வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். இந்த அனைத்து விசயங்களையும் விட்டுவிட்டு பாபாவை நினைவு செய்யுங்கள். இது பாபாவின் கட்டளை. சிவபாபாவின் உடல் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. ஆகையால் ஒருவரிடமே கேளுங்கள். மற்றஅனைத்து விசயங்களையும் விட்டுவிடுங்கள்.

321. உங்களுக்கு யார்மீதும் வெறுப்போ கசப்போ கூடாது. யாரையும் அவமரியாதை செய்யாதீர்கள். அனைவருக்கும் ஒரு பாபாவின் அறிமுகம் கொடுங்கள். இதுதான் No. 1 அன்பு.

322. புத்தி அனைத்து எல்லைக்குட்பட்டதிலிருந்து விடுபட்டு எல்லைக்கப்பாற்பட்டதில் இருக்கவேண்டும். எனது என்பதை விட்டுவிட்டு உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்.

323. திருடுவது, பொய் பேசுவது, விசயத்தை மாற்றுவது (அல்லது) மறைப்பது இவை அனைத்தும் தீய பழக்கங்கள். தேக அபிமானத்தால் இவை வருகிறது. இதுபோன்ற அனைத்து பழக்கங்களையும் விடவேண்டும். சப்தத்துடன் பேசும் பழக்கத்தையும் மாற்றவேண்டும்.

324. யக்ஞத்தில் நேர்மையுடன் (Honest) இருக்கவேண்டும். யக்ஞத்தில் ஒவ்வொரு பைசாவும் பயனுள்ளதாக்க வேண்டும். ஆல்ரவுண்டராகி யக்ஞத்தில் அனைத்துவிதமான சேவையும் செய்யவேண்டும்.

325. தானத்திற்கு மிகுந்த மகிமை உள்ளது. தானம் செய்த பொருளில் பற்று இருக்கக்கூடாது. தானம் செய்தபிறகு வாபஸ் கேட்டால் அதுவும் பாவத்தை உருவாக்குகிறது. தானம் செய்தபிறகு திரும்பப்பெறநினைத்தால் அது திரும்பக்கிடைக்காது. மேலும் சுமை அதிகரித்துவிடும்.

326. யாரிடமும் ஒரு ஆத்மாராமைப் பற்றிய விசயத்தைத்தவிர வேறு எந்த விசயமும்

சொல்லக்கூடாது. ஒருவரின் விசயத்தை மற்றவரிடம் சொல்வது, பாவச்சிந்தனை செய்வது, துஷ்டத்தனமானது. இதை விட்டுவிடவேண்டும்.

327. தனது சுபாவத்தை பாபாவிற்கு சமமாக எளிமையாக்க (Easy) வேண்டும். எந்தவிதமான கேளிக்கையும் வேண்டாம். புத்தியை ஞானம் நிறைந்ததாக்கவும். அபிமானம் நிறைந்த புத்தியாக இருக்கக்கூடாது. சுபாவக் கருத்துவேறுபாட்டிலும் வரவேண்டாம்.

328. தங்களுக்குள் ஒற்றுமையை உருவாக்கி சேவை செய்யவேண்டும். சகிப்புத்தன்மையை தாரணை செய்யவேண்டும். தனக்குத்தானே பேசி தன்னை ஊக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். சதா சாட்சியாக இருப்பதற்கான பயிற்சியைச் செய்யுங்கள்.

329. நீங்கள் ராயலான பாபாவின் ராயலான குழந்தைகள். உங்கள் கண்கள் யாரிடமும் மாட்டிக் கொள்ளக்கூடாது. நீங்கள் யாரிடமும் கையேந்தக்கூடாது. கேட்பதைக் காட்டிலும் இறப்பது உத்தமம்.

330. மற்றவர்களைப்பற்றி சிந்திப்பதை விட்டுவிட்டு தன்னை உயர்ந்த பதவி அடைய புருஷார்த்தம் செய்யவேண்டும். யாருடைய வீணான விசயத்தைக் கேட்டு தனது புத்தியை கெடுத்துக் கொள்ள வேண்டாம். விகர்மாஜீத் ஆவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

331. சதா ஹாஞ்ஜி (சரி ஐயா) என்றபாடத்தை பக்கா (உறுதி) செய்ய வேண்டும். நம்மால் முடியாது என்றுகூறி நாஸ்திகர் ஆகவேண்டாம்.

332. சதா புத்துணர்வுடன் இருப்பதற்காக ஒருநாளில் குறைந்ததிலும் குறைந்த பட்சம் இருமுறைஞானக்குளியல் அவசியம் செய்யவேண்டும்.

333. இது இந்திரசபை. இங்கு நீங்கள் அனைவரும் முக்ராஜ தேவதைகள். நீலாம்பரிகள். ஞான டான்ஸ் செய்கிறீர்கள். இந்த இந்திரசபையில் எந்த பதீதவிகாரியையும் அழைத்து வரமுடியாது. இல்லையெனில் சாபமாகிவிடும்.

334. நீங்கள் சத்திய கீதை சொல்லவேண்டும். கேட்கவேண்டும். சத்திய ராக்கி அணிந்து பவித்திரமாக ஆகவேண்டும்.

335. முரளியைக் கேட்டு ஞானநடனம் ஆடவேண்டும். ஆத்மா அபிமானியாக இருந்து முரளி கேட்க வேண்டும். புத்தி ஆங்காங்கே அலையக்கூடாது. இதில் கவனம் கொடுக்கவேண்டும். வகுப்பில் சோம்பேறித்தனத்தை பரப்பக்கூடாது.

336. நீங்கள் ஞான அமிர்தம் பருகி பகிர்ந்தளிக்கவும் செய்யவேண்டும். சத்திய பிராமணர் நீங்கள். பவித்திரமான கங்கணம் கட்ட வேண்டும். பதீதமாக்கும் கங்கணத்தை நீக்கவேண்டும்.

337. பழைய தர்மங்களின் கணக்கான சொக்கட்டான் ஆட்டத்தை இப்போது முடிக்கவேண்டும். கர்மேந்திரியங்களினால் இப்பொழுது பாவகர்மம் செய்யாதீர்கள்.

338. அசரீரி ஆவதற்கான பயிற்சி செய்வதால் அந்திமதி இறுதிநிலையாகிவிடும். இறுதியில் ஒருபாபாவைத்தவிர இரண்டாவது யாரையும் நினைக்கக்கூடாது.

339. படிப்பிற்கு அமிர்தவேளை சமயம் உன்னதமானது. வேறுவழியற்றசூழ்நிலையால் காலை வகுப்பிற்கு வரமுடியவில்லை என்றால் மாலையில் முரளி கேட்கவேண்டும் அல்லது படிக்கவேண்டும்.

340. மனிதர்களிலிருந்து தேவதையாக பாஸ் ஆவதற்காக நிச்சயபுத்தி உருவாக்கும் சாதனை செய்யவேண்டும். ஒருபோதும் எந்தவிசயத்திலும் சந்தேகம் எழக்கூடாது.

341. தங்களை தூய்மையாக்க ஆத்மபார்வையில் பார்க்கவேண்டும். தேகத்தை பார்த்தாலும் பார்க்காதீர்கள். நான் ஆத்மா என்றபயிற்சியை பக்கா (உறுதி) செய்யவேண்டும்.

342. உங்கள் அனைவருக்கும் இப்போது வானப்பிரஸ்த நிலையாகும். சப்தத்திற்கு அப்பால் நிர்வாணதாமம் செல்லவேண்டும். ஆகையால் தேகம் மற்றும் தேக சம்பந்தங்களிலிருந்து விடுபட்டு பாபாவை நினைவு செய்யவும்.

343. நீங்கள் முழுஉலகத்தின் சத்தியத்திலும் சத்தியமான நண்பர்கள். நீங்கள் யாரிடமும் பகைமை இருக்கக்கூடாது. உங்களிடம் லௌகீக நண்பர்கள், உறவினர்கள் வந்தால் அவர்களுக்கும் பாபாவின் அறிமுகம் கொடுங்கள்.

344. நீங்கள் ரயிலில் வரும்பொழுது சேவை செய்வதற்கு அரிய வாய்ப்பு. ஏனெனில் அனைவரும் ஓய்வாக இருப்பர். நீங்கள் அனைவருக்கும் ஈஸ்வரிய செய்தியைச் சொல்லமுடியும். பேட்ஜ் மூலமும் சேவை செய்யமுடியும்.

345. பாபாவின் சேவையில் முழுமையிலும் முழுமையான உதவியாளராக வேண்டும். ஒருபோதும் தங்களுக்குள் கோபித்துக் கொண்டோ அல்லது மூடாஃப் ஆகி சேவையை விடக்கூடாது. சேவையில் விக்னரூபம் ஆகக்கூடாது.

346. பாபா ஞானக்கலசத்தை மாதாக்களின் தலையில் வைத்துள்ளார். ஆகையால் மாதாக்களுக்கு மதிப்புக் கொடுத்து எப்பொழுதும் முன்னே வைக்கவேண்டும். மாதாக்களின் பதவியை உயர்த்த வேண்டும். மாதாக்களைத்தான் குரு எனக் கூறவேண்டும்.

347. ஒருபோதும் லௌகீக குழந்தைகளுக்கு தொல்லையாக இருக்கவேண்டாம். குழந்தை சஞ்சலம் செய்தால் கோபத்தில் வந்து அடிப்பது முதலியன கூடாது. சின்னக்குழந்தையைத் தேற்றுவதற்காக கயிறால் கட்டுங்கள். சாப்பாடு முதலியன கொடுக்காதீர்கள். மற்றபடி கைகளால் அடிக்காதீர்கள்.

348. யாரிடமும் கடன் வாங்கக்கூடாது. கடன்வாங்குவது ஒரு நோய் என்று கூறப்படுகிறது. குறைந்தபைசாவில் காரியம் செய்யமுடியும். இரண்டு ரொட்டி சாப்பிடுங்கள். பிரபுவின் குணம் பாடுங்கள். தவறாக செலவு செய்யாதீர்கள்.

349. ஒவ்வொருவரும் தனது லௌகீக வேலை செய்துதான் ஆகவேண்டும். போலீஸ் வேலை என்றால் கண்களைக் காட்டவேண்டியது வந்தால் யுக்தியுடன் காட்ட வேண்டும். எவ்வளவு முடியமோ அவ்வளவு அன்பாக் காரியம் செய்யுங்கள். கை நீட்டாதீர்கள்.

350. பவித்ரத்தாவில் கொடுமை ஏற்பட்டாலும் அபலைகள் மீது அடி விழுந்தாலும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். மிகவும் அன்பாக, கனிவாகப் புரியவையுங்கள். ஒருவேளை கோபப்பட்டாலும் நீங்கள் மலர்களால் மழை பொழியுங்கள்.

351. அனைத்து எல்லைக்குட்பட்ட போதைகளை விட்டுவிட்டு ஒரு நாராயண போதையில் இருக்கவேண்டும். நாராயண போதையைத்தவிர மற்றபோதையினால் நஷ்டம்தான்.

352. குழந்தைகளே, நீங்கள் உயிருள்ள கலங்கரை விளக்கம். உங்கள் ஒரு கண்ணில் முக்தி மற்றொன்றில் ஜீவன் முக்தி. நீங்கள் அனைவருக்கும் சாந்தி தாமம், சுகதாமத்திற்கான வழிகாட்ட வேண்டும். நீங்கள் முச்சந்தியில் உள்ளீர்கள். துக்கதாமத்தை மறந்து சாந்திதாமம் மற்றும் சுகதாமத்தை நினைவு செய்யுங்கள்.

353. நீங்கள் உங்கள் வயிற்றைக் கட்டியாவது பாரதத்தை சொர்க்கமாக்கும் சேவை செய்யவேண்டும். நீங்கள் இந்த உலகத்தில் எந்த விசயத்திலும் பொறாமை வேண்டாம்.

354. குழந்தைகளே, இப்பொழுது நீங்கள் தாய்வீட்டிலுள்ளீர்கள். இங்கு நீங்கள் ஆபரணங்கள் அணியவேண்டாம். மிகவும் சாதாரணமாக இருக்கவேண்டும். மாமியார் வீடு சென்று அலங்காரமாக இருந்துகொள்ளலாம். இங்குஅல்ல.

355. குழந்தைகள் ஒருபோதும் யாருக்கும் தொல்லை தரக்கூடாது. தொல்லை அடையவும் கூடாது.

356. குழந்தைகளே உங்கள் குழந்தைகளுக்கு ஆஞ்ஞாகாரி ஆகவேண்டும். எந்தவிசயத்திலும் தட்டிக்கழிக்கக்கூடாது. தொட்டாற்சுருங்கியாக மென்மையாக ஆகக்கூடாது. நான் இவர்களுடன் இருக்கமாட்டேன்.... செல்லமாட்டேன்... இந்த தொட்டாற்சுருங்கிதனத்தை விடவேண்டும். பிணங்குவது, அழுவது போன்ற அசுர சுபாவம் குழந்தைகளிடம் இருக்கக்கூடாது.

357. ஒவ்வொருவரின் பாகத்தை அறிந்தாலும் தனது ஸ்திதியை சதா ஏக்ரஸ் மற்றும்

யோகஜீத் ஆக ஆக்கவேண்டும். சதா திருப்தியாக இருக்கவேண்டும். மேலும் அனைவரையும் திருப்திபடுத்த வேண்டும்.

358. நீங்கள் அற்பமான (சோழி) விசயங்களின் பின் நேரத்தை வீணாக்காதீர்கள். நீங்கள் வைரமாக்ககூடியவர்கள். நீங்கள் இந்த ஆன்மீக வேலை செய்யவேண்டும்.

359. இந்த ஞானத்தை பாத்திரம் அறிந்து கொடுக்கவேண்டும். யாராவது வாக்குவாதம் செய்தால் கற்பனை எனச்சொன்னால் அவரிடம் உங்கள் விலைமதிப்பற்றநேரத்தை வீணாக்காதீர்கள். அவருக்கு அன்பு மற்றும் பணிவுடன் புரியவைத்து விலகிவிடுங்கள்.

360. ஏதாவது பார்ட்டிக்கு செல்ல நேரிட்டால் செல்லலாம். திருப்தி செய்யுங்கள் ஆனால் அவர்களின் கையால் சாப்பிடக்கூடாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தானே யுக்தியை உருவாக்கிக் கொள்ளவும். ஏனென்றால் சாப்பாடு மனதில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

361. நீங்கள் பிறந்தவீடு, புகுந்தவீடு இரண்டிற்கும் நன்மை செய்யவேண்டும். என்னிடம் பேசவில்லை முகத்தை திருப்புகிறார் என்று சொல்லும் அளவிற்கு நடக்கக்கூடாது. அனைவருக்கும் வழிகாட்ட வேண்டும். அனைவரிடமும் இணைந்திருக்கவேண்டும்.

362. நீங்கள் ஒருவர் மற்றவருக்கு எச்சரிக்கை செய்து முன்னேற்றம் அடைய வேண்டும். எந்தவிதமான தவறான நடத்தையிலும் செல்லக்கூடாது. பணிவுடன் இருக்கவேண்டும்.

363. குழந்தைகளே, உங்கள் சென்டரில் கதவு எப்பொழுதும திறந்தே இருக்கவேண்டும். யாரும் உங்களிடமிருந்து வெறும் கையாக செல்லக்கூடாது.

364. நீங்கள் தூக்கத்தை வென்றவராக ஆகவேண்டும். இரவில் விழித்து சத்தியவருமானம் செய்யவேண்டும்.

365. ஆத்ம அபிமானி குழந்தையின் படிப்பு, பாபாவிடம் அழியாத அன்பு மிகக்குளிர்ந்த நிலையிருக்கும். அதிகமாக பேசமாட்டார்கள். நடத்தை மிக ராயலாக இருக்கும். அவர்கள் சுகமாக இருப்பதால் அனைவரிடத்திலும் அன்பாக இருப்பார்கள். அவர்களின் வார்த்தை ஜாலம் மிக அழகாக இனிமையாக இருக்கும். அனைத்தையும் பார்த்தாலும் எதையும் பார்க்காதது போன்று முயற்சி செய்யவும். அப்பொழுதுதான் நிலை நன்றாக ஆகும். அப்படிப்பட்ட முயற்சி செய்யும் குழந்தைகள்தான் உயர்ந்த பதவி அடையமுடியும். இதற்கு விடுபட்டவராக ஆகவும்.

**சதா தன்னை நடந்தாலும் சுற்றினாலும் ஒளிவட்டத்திற்குள், ஆகாரி, பரிஸ்தா ரூபத்தில் அனுபவம் செய்வீர்களா? எப்படி பிரம்மா பாபா அவ்யக்த பரிஸ்தா ரூபத்தால் நாலாபுறமும் சேவைக்கு நிமித்தமாக ஆனார்? அதேபோல் பாபாவுக்கு சமமாக தன்னையும் ஒளி சொருப ஆத்மா மற்றும் ஒளி சொருப ஆதாரரூப பரிஸ்தாவாக அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதா இருவருக்கும் சமமாக ஆகவேண்டும். யாரிடம் அன்பு இருக்குமோ அவரைப்போலவே போவோம். அன்பு என்றால் சமஸ்கார சந்திப்பு. மேலும் அதன் ஆதாரத்தில் அன்பாக இருப்பதாகும்.**

**சமஸ்கார சந்திப்பு இல்லையென்றால் எவ்வளவு அன்பாக முயற்சி செய்தாலும் ஆகமுடியாது. ஆகையால் இரண்டுாவிற்கும் அன்பானவர்கள் நீங்கள். பாபா சமம் என்றால் ஒளி ஆத்மா சொருபத்தில் நிலைத்து இருப்பது மற்றும் பாபாபோல் பரிஸ்தா ஆவதாகும்.**

**பரிஸ்தா ஆகி செல்கிறீர்களா? அதாவது தத்துவங்களால் மண்ணால் உருவாக்கப்பட்ட சரீரம் என்றால் பூமி தன் பக்கம் கவர்ந்திழுக்கிறதா? எப்பொழுது ஆகாரி ஆகிவிடுகிறீர்களோ அப்போது இந்த தேகம் (பூமி) கவர்ச்சி செய்யமுடியும்.**

ஓம் சாந்தி!